விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27

ஒலி 066 வள்ளுவர் ஆண்டு 2057 மாசி 11 திங்கட்கிழமை (23.02.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ்

## இரட்டைப் படுகொலை சூத்திரதாரிக்கு மறியல்

### இராணுவத்திலிருந்து விலகியவராம்

(கொழும்பு)

அங்குரேகொடப் பகுதியில் கடந்த 13ஆம் திகதி சட்டத்தரணி ஒருவரும் அவரது மனைவியும் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கைதான சூத்திரதாரியைப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைத்து விசாரிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு கைது 15ஆம் பக்கம் பார்க்க

## 'சங்கு' கூட்டணியின் பேராளர் மாநாடு 15 தீர்மானங்கள் நிறைவேற்றம்

(சாவகச்சேரி)

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் (சங்கு) முதலாவது பேராளர் மாநாடு, யாழ்ப்பாணம் சாவகச்சேரி நகர சபை பொன்விழா மண்டபத்தில் நேற்று (22) நடைபெற்றது. 02ஆம் பக்கம் பார்க்க



## எரிவாயுக் கப்பல் நாட்டுக்கு வருகை



15ஆம் பக்கம் பார்க்க

பலாலி சர்வதேச விமான நிலையம்

# விஸ்தரிப்பு இடம்பெறாமையால் இந்திய மத்திய அரசு அதிருப்தி

### ஜனாதிபதி அநுரவிடம் நேரில் தெரிவிப்பு

(கொழும்பு)

இந்தியாவுக்கு விஜயம் செய்த ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவிடம், பலாலி சர்வதேச விமான நிலையத்தின் விஸ்தரிப்புப் பணிகள் எதுவும் இடம்பெறாமை குறித்து இந்திய மத்திய அரசு தனது அதிருப்தியை வெளியிட்டதாக இந்திய இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(15ஆம் பக்கம் பார்க்க)

## முச்சக்கரவண்டிச் சாரதி கடத்திப் படுகொலை

### புத்தளத்தில் பயங்கரம்

(புத்தளம்)

புத்தளத்தில் முச்சக்கரவண்டிச் சாரதியொருவர் கடத்திப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

வாடகைக்குச் செல்வதாகக் கூறி அழைத்துச் 15ஆம் பக்கம் பார்க்க

## ரயிலில் மோதுண்ட கப் ரக வாகனம்

### இருவர் உயிரிழப்பு

(களுத்துறை)

காலியிலிருந்து மருதானை நோக்கிச் சென்ற காலி குமாரி விரைவு ரயிலுடன் கப் ரக வாகனமொன்று விபத்துள்ளானதில் வாகனத்தில் பயணித்த இரு 15ஆம் பக்கம் பார்க்க

## நாட்டை விட்டு மெல்ல விலகும் தாழமுக்கம்

(கொழும்பு)

தென்மேற்கு வங்காள விரிகுடா கடற்பரப்புகளுக்கு மேலாக நிலை கொண்டுள்ள தாழமுக்கம்நாட்டை விட்டு விலகிச் செல்வதன் 15ஆம் பக்கம் பார்க்க

## சுயாதீன வழக்குத் தொடுநர் முதற்கட்டப் பணி ஏப்ரலில் பூர்த்தி

(கொழும்பு)

சுயாதீன வழக்குத்தொடுநர் அலுவலகத்துக்கான சட்டமூலம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் வெளியிடப்படுமென நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

சுயாதீன வழக்குத்தொடுநர் அலுவலகம் தொடர்பில் முன்னெடுக் 16ஆம் பக்கம் பார்க்க



## பிரித்தானியப் பிரதிப் பிரதமருடன் சிவில் சமூகப் பிரதிநிதிகள் சந்திப்பு

### பல்வேறு விடயங்கள் குறித்து எடுத்துரைப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தால் தேர்தல் காலத்தில் வழங்கப்பட்ட வாக்குறுதிகளுக்கு முரணாக மாகாண சபைத் தேர்தலை நடத்துவதிலும் புதிய அரசியலமைப்பு உருவாக்கத்திலும் ஏற்படும் காலதாமதம் குறித்து இலங்கைக்கு வருகை தந்துள்ள பிரித்தானியப் பிரதிப் பிரதமர் டேவிட் லம்மியிடம் சிவில் சமூகப் பிரதிநிதிகள் எடுத்துரைத்துள்ளனர். 02ஆம் பக்கம் பார்க்க

மின்கட்டண அதிகரிப்பு

## பொதுஜன அபிப்பிராயம் கேட்டறிய நடவடிக்கை

(கொழும்பு)

2026ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டுக்கான மின்சாரக் கட்டணத் திருத்தம் தொடர்பாக இலங்கை மின்சார சபையினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள யோசனைத் திட்டம் குறித்து பொதுமக்களின் கருத்துக்களைக் கேட்டறியும் நடவடிக்கைகள் எதிர்வரும் 15ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச பொறுப்புக்கூறல் பொறிமுறையை அமுலாக்குக!

## ஐ.நா.மனித உரிமை ஆணையருக்குக் கடிதம்

(யாழ்ப்பாணம்)

வலிந்து காணாமலாக்கப்படல்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்கும், பாதிக்கப்பட்டோருக்கான நீதியை நிலைநாட்டுவதற்கும் நம்பத்தகுந்த சர்வதேச பொறுப்புக்கூறல் பொறிமுறையை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க்கிடம் வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து அச்சங்கத்தின் செயலாளர் ஆ.லீலாதேவியினால் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க்குக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது,

29 குழந்தைகள் உள்ளடங்கலாக வலிந்து காணாமலாக்கப்பட்ட எமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என்ற உண்மையையும் அவர்களுக்கான நீதி மற்றும் பொறுப்புக்கூறலையும் வலியுறுத்தி வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தினால் அமைதிப்போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு 9 ஆண்டுகள் பூர்த்தியடைந்திருப்பதை முன்னிட்டு உங்களுக்கு இந்தக் கடிதத்தை எழுதுகிறோம்.

2017 ஆம் ஆண்டு பெப்ரவரி 20 ஆம் திகதி இந்தக் கவனயீர்ப்புப் பிரசாரம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்களால் தொடர் போராட்டங்கள், ஆவணப்படுத்தல் முயற்சிகள் மற்றும் சர்வதேச பொறிமுறைகளுடனான தொடர்புகள் எனப் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

எமது இந்தப் போராட்டத்தின் ஊடாக எமக்குப் பதிலளிக்குமாறு கோரப்படுவதுடன் மாத்திரமன்றி, வலிந்து காணாமலாக்கப்படல்கள் தொடர்பான சர்வதேச மனித உரிமைகள், நியமங்கள் மற்றும் கடப்பாடுகளைப் பின்பற்றிச் செயற்படுமாறும் வலியுறுத்தப்படுகிறது.

எமது இந்தத் தொடர் போராட்டமும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை உள்ளிட்ட சர்வதேசப் பொறிமுறைகளுடனான நிலையான தொடர்புகளும் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட மனித உரிமைகள் நியமங்களைப் பாதுகாப்பதிலும் நடைமுறைப்படுத்துவதிலும் நாம் கொண்டிருக்கும் அர்ப்பணிப்புடன் கூடிய கடப்பாட்டைப் பிரதி பலிக்கிறது.

மறுபுறம் தொடர் வலியுறுத்தல்களின் பின்னரும் நம்பத்தகுந்ததும் பக்கச்சார்பற்றதும் செயற்திறன் மிக்கதுமான விசாரணைகளை முன்னெடுப்பதற்கு உள்நாட்டு அரசாங்கங்கள் தவறியிருக்கின்றன.

அதன்விளைவாக வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்களுக்கான உண்மை, நீதி மற்றும் சர்வதேச நியமங்களுக்கு அமைவான இழப்பீடு என்பன உறுதி செய்யப்படவில்லை.

இவ்வாறானதொரு பின்னணியில் வலிந்து காணாமலாக்கப்படல்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்கும் பாதிக்கப்பட்டோருக்கான நீதியை நிலைநாட்டுவதற்கும் நம்பத்தகுந்த சர்வதேச பொறுப்புக்கூறல் பொறிமுறையை ஸ்தாபிப்பதற்கான முயற்சிகளை வலுப்படுத்துமாறு உங்களிடம் கேட்டுக் கொள்கிறோம்.

அதேபோன்று இறுதிக் கட்டப்போரின்போது சரணடைந்த மற்றும் நாமாகக் கையளித்த சோதனைச்சாவடி களுக்குப் பொறுப்பாக இருந்த இராணுவ அதிகாரிகளை விசாரணைக்குட்படுத்தவும் அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரவும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

அத்தோடு உள்ளகப் பொறி முறைகள்மீது நம்பிக்கை இழந்து, அவற்றை நிராகரித்திருக்கும் பாதிக்கப்பட்ட தரப்பினரின் நிலைப்பாட்டுக்கு மதிப்பளிக்கப்பட வேண்டும். மேலும் தமிழ்மக்களின் இனப்பிரச்சினைக்கு நிலையான தீர்வொன்றைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஆதரவளிக்க வேண்டும் என அக் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது. (ந-7)

## ‘சங்கு’ கூட்...

அரசாங்கம் கொண்டுவர விரும்பும் புதிய அரசியல் அமைப்பானது, சமஷ்டி அரசியல் முறையை அடிப்படையாகக் கொண்டு அமைய வேண்டும் என ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் பேராளர் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இன அழிப்பு செயற்பாடுகள் மீள நிகழாமையை உறுதி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட 15 தீர்மானங்கள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளதாக, ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணி வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள்**

பழைய முறைப்படி மாகாணசபைத் தேர்தலை நடத்தி, மாகாண அதிகாரத்தை மக்கள் பிரதிநிதிகளிடம் வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும், 40 வருடங்களுக்கு முன்னர் தற்காலிக ஏற்பாடாகக் கொண்டு வரப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டம், தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதற்காகவே கொண்டு வரப்பட்டது.

இந்தச் சட்டத்தின் கீழ் நூற்றுக் கணக்கான இளைஞர், யுவதிகள் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டனர்.

எனவே, ஜனாதிபதியின் உறுதிமொழிக்கு அமைய, பயங்கரவாதத் தடைச் சட்டம் முற்று முழுதாக இல்லாதொழிக்கப்பட வேண்டும்.

இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக ஸ்ரீலங்கா அரசு நடத்திய இன அழிப்பு, போர்க்குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் யாவும் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பன்னாட்டு நீதித் துறைக் கட்டமைப்பின் ஊடாக விசாரணை செய்யப்பட்டு, பரிகார நீதி வழங்கப்பட வேண்டும்.

சிறைச்சாலைகளில் மிக நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்காகப் பல ஆண்டுகளாகத் தொடர்ச்சியாகப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பாதிக்கப்பட்டவர்களுக்கு இதுவரை உரிய நீதி கிடைக்கவில்லை என்பது கவலைக்குரியது.

இந்தநிலையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கு அரசாங்கம் உடனடியாக நீதியை வழங்க வேண்டும்.

இந்திய இழுவை மடிப் படகுகள் மற்றும் சட்டவிரோத மீன்பிடி முறைகளால் 46 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த இரண்டு இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் வாழ்வாதாரத்தை இழந்து கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

2016 ஆம் ஆண்டு இலங்கை-இந்திய அரசுகள் மேற்கொண்ட கூட்டு இணக்கப்பாட்டின் அடிப்படையில் மீண்டும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும்.

1996 மற்றும் 2017-ஆம் ஆண்டின் கடற்றொழில் சட்டங்களை உறுதியாக நடைமுறைப்படுத்துவதுடன் கடற்றொழிலாளர் கிராமங்களில் உள்ள படைத்தரப்பினரை வெளியேற்றி கடற்றொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும்.

சீரற்ற வானிலை காரணமாக நெல்லை உலர்த்த முடியாமலும் நிர்ணய விலைக்கு விற்க முடியாமலும் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இம்முறை 8 இலட்சம் ஹெக்டேயர் நிலப்பரப்பில் 30 இலட்சம் மெட்ரிக் தொன் நெல் அறுவடை எதிர்பார்க்கப்படுவதால், நிர்ணய விலையில் முழு நெல்லையும் கொள்வனவு செய்ய அரசாங்கம் போதிய நிதியை ஒதுக்க வேண்டும்.

வடக்கு மாகாணத்திற்கு மகாவலி நீர் வருவதற்கான வாய்ப்புகள் இல்லை எனத் தெரிந்தும், "மகாவலி எல்" வலயம் என்ற பெயரில் சிங்களக் குடியேற்றங்கள் முன்னெடுக்கப்படுகிறது.

வவுனியா வடக்கு பிரதேசத்திலும் இவ்வாறான திட்டமிட்ட குடியேற்றங்கள் மூலம் தமிழ் கிராமங்கள் மற்றும் விவசாய நிலங்களை மூழ்கடிக்கக்கூடிய "கிவுல் ஓயா" திட்டத்தை உடனடியாகக் கைவிட வேண்டும்.

தமிழ் மக்களிடமிருந்து பறிக்கப்பட்ட காணிகள் விடுவிக்கப்படும் என உறுதியளித்திருந்தும், 16 மாதங்கள் கடந்தும் இன்னும் காணிகள் விடுவிக்கப்படவில்லை.

இராணுவக் கட்டுமானங்கள் தொடர்வது தமிழ் மக்கள் மீதான பாரபட்சத்தைக் காட்டுவதாகவும், எனவே மக்களின் வதிவிடங்களை உடன் விடுவிக்க வேண்டும்.

தொல்லியல் மற்றும் வனவளத் திணைக்களங்கள் ஊடாகத் தமிழ் மக்களின் நிலங்கள் பறிக்கப்படுவதையும் சட்டவிரோத புத்த கோயில் கட்டுமானங்களையும் தடுத்து விசாரணை நடத்த வேண்டும்.

மயிலத்தமடு, மாதவனை போன்ற மேய்ச்சல் தரை ஆக்கிரமிப்புகளைத் தடுத்து, வாகரைப் பிரதேசத்தில் சட்டவிரோத இறால் பண்ணைகள் மற்றும் கனிம அகழ்வுகளை நிறுத்த வேண்டும்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள கல்முனை வடக்கு தமிழ்ப் பிரதேச செயலர் பிரிவை முழுமையான அதிகாரங்கள் கொண்ட செயலகமாகத் தரம் உயர்த்த வேண்டும்.

கடந்த நான்கு தசாப்தங்களாக (40 ஆண்டுகள்) இதற்காகத் தமிழ் மக்கள் தொடர்ச்சியாகப் போராடி வருகின்றனர்.

கடந்தகால அரசாங்கங்கள் இப்பிரச்சினையைத் தீர்க்காமல் மக்களை ஏமாற்றி, இனப் பகைமையை வளர்க்கும் விதமாகவே செயற்பட்டுள்ளன.

இதன்படி "அனைவரும் இலங்கையர்" எனக் கூறும் தற்போதைய அரசு, கல்முனைத் தமிழர்களுக்கு இழைக்கப்படும் இந்த நீண்டகால அநீதிக்கு உடனடியாகத் தீர்வு காண வேண்டும்.

"பிரஜா சக்தி" திட்டத்தை இலங்கை அரசு உடனடியாகக் கைவிட வேண்டும்.

மாகாண சபை நிர்வாகத்துடன் சட்டரீதியான தொடர்பில்லாத ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களை உள்வாங்கி கல்வி, சுகாதாரம், விவசாயம் உள்ளிட்ட துறைகளின் பொறுப்புகளை வட மாகாண ஆளுநர் பகிர்ந்து வழங்கியுள்ளார்.

இந்தச் செயல் சட்டவிரோதமானது மற்றும் மாகாண சபை நிர்வாகத்தைச் சிறுமைப்படுத்தும் நடவடிக்கையாகும்.

ஆளுநர் இந்த சட்டவிரோத நடவடிக்கையை உடனடியாகக் கைவிட வேண்டும் என்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. (ந-7)

## பிரித்தானியப்...

உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு கடந்த வாரம் இலங்கைக்கு வருகை தந்திருந்த பிரித்தானிய பிரதி பிரதமர் டேவிட் லமிக்கும் சிவில் சமூகப்பிரதிநிதிகளுக்கும் இடையில் கொழும்பில் நடைபெற்ற சந்திப்பில் சிவில் சமூகத்தின் சார்பில் கலாநிதி அகிலன் கதிர்காமர், ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ், சட்டத்தரணி ரணிதா ஞானராஜா, சட்டத்தரணி கௌதமன், பெண்கள் உரிமை செயற்பாட்டாளர் நபீலா இக்பால் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

இச்சந்திப்பின் போது, முன்னெப்போதுமில்லாத வகையில் சிங்களத் தேசிய கட்சிகளில் ஒன்றான தேசிய மக்கள் சக்தி வடக்கில் காலூன்றுவதற்கு வழிவகுத்த பின்னணிக் காரணங்கள் குறித்து பிரித்தானிய பிரதிப் பிரதமர் டேவிட் லமி சிவில் சமூகப் பிரதிநிதிகளிடம் ஆர்வமாகக் கேட்டறிந்துள்ளார்.

இச்சந்திப்பின்போது "டித்வா" சூறாவளியினால் ஏற்பட்ட தாக்கங்கள் மற்றும் அவற்றிலிருந்து நாட்டை மீளக்கட்டியெழுப்புவதற்கு மேற்கொள்ளப்பட்டுவரும் முயற்சிகள், சிறுபான்மையின மக்களின் உரிமைகள், பயங்கரவாதத் தடைச்சட்டம் மற்றும் அதற்குப் பதிலீடாக முன்மொழியப்பட்டுள்ள புதிய வரைவு, நீதி மற்றும் பொறுப்புக்கூறல் இன்னமும் உறுதிப்படுத்தப்படாமை, மாகாணசபைத்தேர்தல்களை நடாத்துவதில் தொடரும் கால தாமதம், புதிய அரசியலமைப்பு உருவாக்க விவகாரத்தில் நிலவும் பின்னடைவு, முஸ்லிம் விவாக, விவகாரத் துச்சட்டம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20 அடி பள்ளத்தில் பாய்ந்த லொறி

## இருவர் படுகாயம்

(கொழும்பு)

ஹட்டன் - கொழும்பு பிரதான வீதியில் வட்டவளை சிங்கள மகா வித்தியாலயத்துக்கு அருகில் இடம்பெற்ற கோர விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

ஹட்டனிலிருந்து தங்கொட்டுவ நோக்கி அதிவேகமாகப் பயணித்த லொறி ஒன்று, வீதியை விட்டு விலகி சுமார் 20 அடி பள்ளத்தில் வீழ்ந்து புரண்டதிலேயே இந்த விபத்து நேர்ந்துள்ளது.

எதிரே வந்த மற்றொரு லொறியுடன் மோதி விபத்துக்குள்ளாவதைத் தவிர்க்க முயன்ற போதே, லொறி தனது கட்டுப்பாட்டை இழந்து பள்ளத்தில் வீழ்ந்தது என்று விபத்துக்குள்ளான லொறியின் சாரதி தெரிவித்துள்ளார்.

லொறியின் இடிபாடுகளுக்குள் சிக்கியிருந்த சாரதியை பொலிஸார் கடும் போராட்டத்துக்கு மத்தியில் மீட்டுள்ளனர்.


படுகாயமடைந்த சாரதியும் உதவியாளரும் வட்டவளை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக நாவலப்பிட்டி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (8)



## திருடர்களைப்பிடிப்பது பழி வாங்கல் அல்ல!

# மக்கள் சொத்தை திருடியவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவர்

## அமைச்சர் நளிந்த



**(கொழும்பு) ................. கடந்த காலங்களில் நாட்டைச் சூறையாடியவர்கள் மற்றும் ஊழல்வாதிகளுக்கு எதிராகச் சட்டத்தை நிலைநாட்டுவதை "அரசியல் பழிவாங்கல்" எனக் கூறி எவரும் தப்பிக்க முடியாது என அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.**

இது குறித்து அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ மேலும் கூறுகையில்,

நாட்டை சூறையாடியவர்களைப் பற்றிச் சிந்திப்பதற்கு எங்களுக்கு எந்த அவசியமும் இல்லை. அவர்கள் இப்போது ஓர் அரசியல் சக்தியே கிடையாது.

ஆனால், தேர்தலில் மக்கள் வழங்கிய ஆணையின் பிரகாரம் மக்கள் சொத்தைத் திருடியவர்கள் எவராக இருந்தாலும் அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்பதே எமது அரசின் நிலைப்பாடு. அதைச் செய்யும் போது திருடர்களுக்குப் பயம் வருவது இயல்பானதுதான். அதைத்தான் "பழிவாங்கல்" என்று கூச்சலிடுகின்றார்கள்.

விவசாயிகள், மீனவர்கள் மற்றும் அரச ஊழியர்கள் பற்றிப் பேச ஊழல்வாதிகளுக்கு எந்த அருகதையும் இல்லை.

இவர்களது ஆட்சிக் காலத்தில்தான் விவசாயிகள் உரமில்லாமலும், மீனவர்கள் எரிபொருள் இல்லாமலும், மக்கள் வரிச்சுமையாலும் வீதிக்கு வந்தார்கள்.

அந்தப் பாவங்களைச் சரி செய்யவே நாம் இன்று பாடுபடுகின்றோம். திருடர்களைப் பாதுகாப்பது எமது பணியல்ல, சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டுவதே எமது பணி.

குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்துவது அரசின் கடமையாகும். முறையான விசாரணைகளின்றி யாரையும் சிறையில் அடைக்க மாட்டோம்.

ஆனால், ஆதாரங்களுடன் சிக்கியவர்கள் எவராக இருந்தாலும் அவர்களுக்குத் தகுந்த தண்டனை பெற்றுத் தருவதில் இந்த அரசு பின்வாங்காது என்றும் அவர் மேலும் எச்சரிக்கை விடுத்தார். (8)

# தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு யாழ்ப்பாணம் பொதுசன நூலகம் நடத்தும் 2025 ஆம் ஆண்டின் இறுதி நாள் நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு பொதுசன நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ். பொதுசன நூலக பிரதம நூலகர் திருமதி சி.அனுசியா தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி வி. மதிவதனியும் சிறப்பு விருந்தினராக யாழ். மாநகரசபை ஆணையாளர் ச.கிருஷ்னேந்திரன் மற்றும் கௌரவ விருந்தினராக தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ப. நந்தகுமாரும் கலந்து கொள்ளவுள்ளனர். (8)

# போதைப் பொருட்களுடன் 842 பேர் கைது

(கொழும்பு)

"முழு நாடுமே ஒன்றாக" எனும் தேசிய திட்டத்தின் கீழ், நேற்று முன்தினம் சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் சுமார் 842 பேர் போதைப் பொருட்களுடன் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (8)

# உவர்நீர் தடுப்பணைகளை புனரமைக்க 187 மில்லியன் ரூபா தேவை

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட டித்வா புயல் காரணமாக பூநகரி மற்றும் பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேசங்களில் சேதமடைந்த உவர்நீர் தடுப்பணைகளை புனரமைப்பதற்கு சுமார் 187 மில்லியன் ரூபா நிதி தேவையென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள தகவல்களின் மூலம் மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேசங்களில் உள்ள கடற்கரையோரங்களில் காணப்பட்ட உவர் நீர்தடுப்பணைகள் வெள்ளத்தினால் சேதமடைந்து கடல் நீர் உட்புகுந்தமையால் சுமார் இரண்டாயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட வயல் நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன

எதிர்காலத்தில் இவற்றை புனரமைப்பதற்கு சுமார் 187 மில்லியன் ரூபா நிதி தேவையென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. (8-315)

# 1000 கிலோ கஞ்சா தீ வைத்து அழிப்பு!

(கரணவாய்)

பருத்தித்துறை நீதிமன்றத்தில் சான்றுப் பொருட்களாக வைக்கப்பட்டிருந்த ஆயிரம் கிலோகிராம் கஞ்சா தீ வைத்து அழிக்கப்பட்டது.

பருத்தித்துறை, வல்வெட்டித்துறை மற்றும் நெல்லியடி பொலிஸாரால் கைப்பற்றப்பட்டு சான்றுப் பொருட்களாக பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் வைக்கப்பட்டிருந்த ஆயிரம் கிலோகிராம் கஞ்சா பருத்தித்துறை நீதிமன்ற




நீதவான் இந்துஷா சிவலிங்கம் முன்னிலையில் குடத்தனை வலிக்கண்டிப் பகுதியில் நேற்று ஞாயிற்றுக் கிழமை தீயிட்டு அழிக்கப்பட்டது. (8-60)

# பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கு; கிளிநொச்சியில் கையெழுத்துப் போராட்டம்

(தருமபுரம்)

பழைய பயங்கரவாத தடைச்சட்டமும் வேண்டாம் புதிய பயங்கரவாத தடைச் சட்டமும் வேண்டாம். பயங்கரவாத தடைச்சட்டமே தேவையில்லை என வலியுறுத்தி கிளிநொச்சி மாவட்ட சிவில் அமைப்புக்களின் ஏற்பாட்டில் பயங்கரவாத தடைச்சட்டத்திற்கெதிராக கையெழுத்து பெறும் நடவடிக்கை கிளிநொச்சி பொதுச்சந்தை முன்பாக நேற்றைய



தினம் முன்னெடுக்கப்பட்டது. நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனும் கலந்து கொண்டார். (8-316)

# காலாவதி கடந்த உணவுப் பொருட்கள்; 70 ஆயிரம் ரூபா தண்டம்

(கரணவாய்)

காலாவதி கடந்த உணவுப் பொருட்களை களஞ்சியப்படுத்தி வைத்திருந்த உரிமையாளர்களுக்கு எதிராக 70 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நகரசபையின் எல்லைக்குட்பட்ட வெதுப்பகமொன்றிலும் மற்றும் பல்பொருள் அங்காடியொன்றிலும் காலாவதி கடந்த உணவுப் பொருட்களை விற்பனையின் பொருட்டு களஞ்சியப்படுத்தி வைத்திருந்த உரிமையாளர்களிற்கு எதிராக பருத்தித்துறை நகரசபையின் பொதுச்சுகாதார பரிசோதகர் ப. தினேஸினால் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வேளை வெதுப்பக உரிமையாளருக்கு 40 ஆயிரம் ரூபாவும் பல்பொருள் அங்காடி உரிமையாளருக்கு 30 ஆயிரம் ரூபா தண்டமும் விதிக்கப்பட்டது. (8-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

# டிஜிற்றல் முறையில் அதிக பார்வையாளர்கள்; சாதனை படைத்த இந்தியா-பாகிஸ்தான் போட்டி

**ஐ.சி.சி போட்டிகளின் வரலாற்றில் இந்தியா-பாகிஸ்தான் போட்டி டிஜிற்றல் முறையில் அதிகம் பார்க்கப்பட்ட ரி-20 போட்டியாக சாதனை படைத்துள்ளது.**





கடந்த 15 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை கொழும்பில் உள்ள ஆர். பிரேமதாச மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியை 163 மில்லியன் மக்கள் டிஜிற்றல் முறையில் பார்த்ததாக இந்த ஆண்டு உலகக் கோப்பையின் அதிகாரபூர்வ டிஜிற்றல் மற்றும் ஒளிபரப்பு கூட்டாளியான ஜியோஸ்டார் அறிவித்துள்ளது.

அதன்படி, பார்வையாளர்களின் எண்ணிக்கை இந்தியா மற்றும் தென்னாபிரிக்கா இடையேயான 2024 ரி-20 உலகக் கிண்ண இறுதிப் போட்டியின் பார்வையாளர்களின் எண்ணிக்கையை விட அதிகமாக பதிவாகியுள்ளது.

இந்தியா மற்றும் பாகிஸ்தானுக்கு இடையே அதிகரித்து வரும் அரசியல் நெருக்கடி காரணமாக, இரு நாடுகளுக்கும் இடையிலான கிரிக்கெட் போட்டிகளுக்கான பார்வையாளர்களின் கவனம் வழமைக்கு மாறாக அதிகரித்துள்ளது. இந்த நிலையில் கடந்த ரி-20 உலகக் கோப்பையில் இந்தியா-பாகிஸ்தான் போட்டியைப் பார்த்த மக்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது இந்த முறை பார்வையாளர்களின் எண்ணிக்கையில் 56% அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (3)

# இலங்கை அணியை குறைத்து மதிப்பிடாதீர்கள் - ரவி சாஸ்திரி



இலங்கை கிரிக்கெட் அணியின் அண்மைக்கால ஆட்டத்திறன் மற்றும் பலம் குறித்து இந்திய அணியின் முன்னாள் தலைமை பயிற்றுவிப்பாளர் ரவி சாஸ்திரி தனது கருத்துக்களைப் பகிர்ந்துள்ளார்.

இலங்கை அணி 17.1 ஓவர்களில் 180இற்கும் அதிகமான ஓட்டங்களைக் குவித்தமை சாதாரணமான ஒன்றல்ல, அது ஒரு மிகச்சிறந்த முயற்சி என அவர் பாராட்டியுள்ளார்.

"அன்று எல்லாமே சரியாக அமைந்தன. பந்துவீச்சு, களத்தடுப்பு என அனைத்தும் சிறப்பாக இருந்தது," என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அணியின் பின்னணியில் உள்ள அனுபவம் வாய்ந்த பயிற்றுவிப்பாளர் குழாம் குறித்து ரவி சாஸ்திரி மகிழ்ச்சி வெளியிட்டுள்ளார்.

தனது முன்னாள் உதவியாளர்களான ஆர்.ஸ்ரீதர் (களத்தடுப்பு பயிற்றுவிப்பாளர்) மற்றும் விக்ரம் ரத்தோர் (துடுப்பாட்ட பயிற்றுவிப்பாளர்) ஆகியோர் இலங்கை அணியுடன் இணைந்திருப்பது அந்த அணிக்கு பலம் சேர்ப்பதாகக் கூறினார்.

எவ்வாறாயினும், காயமடைந்துள்ள வனிந்து ஹசரங்க குறித்து கருத்துத் தெரிவிக்கையில், அவர் ஒரு தரம் வாய்ந்த சுழற்பந்து வீச்சாளர் என்றும், தொடரின் இறுதிப் பகுதிகளில் அவர் இல்லாதது இலங்கை அணிக்கு ஒரு இழப்பாக அமையக்கூடும் என்றும் ரவி சாஸ்திரி தெரிவித்தார்.

அத்துடன் "இலங்கை அணி சொந்த மண்ணில் விளையாடுவதால் அவர்களை ஒருபோதும் குறைத்து மதிப்பிடாதீர்கள்" என அவர் மேலும் வலியுறுத்தினார். (3)

# இறுதி லீக் ஆட்டம் அவுஸ்திரேலியாஅபாரம்!




ஐ.சி.சி ரி-20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் அவுஸ்திரேலியா அணி 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

கண்டி, பல்லேகல விளையாட்டரங்கில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் அவுஸ்திரேலியா மற்றும் ஓமான் ஆகிய அணிகள் மோதின.

போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலியா அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

அதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஓமான் அணி 16.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 104 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டது. துடுப்பாட்டத்தில் ஓமான் அணியின் சார்பில் வசீம் அலி 32 ஓட்டங்களை அதிகபட்சமாக பெற்றுக் கொடுத்தார்.

இந்தநிலையில் 105 ஓட்டங்கள் எனும் வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா அணி 9.4 ஓவர்கள் நிறைவில் 1 விக்கெட்டினை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை கடந்தது.

துடுப்பாட்டத்தில் அவுஸ்திரேலியா அணியின் சார்பில் அணித்தலைவர் மிட்ஷல் மார்ஷ் ஆட்டமிழக்காமல் அதிகபட்சமாக 64 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார். (3)

# தொடர் மழையால் கைவிடப்பட்ட நியூசிலாந்து - பாகிஸ்தான் போட்டி

ஐ.சி.சி ரி-20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரினுடைய சூப்பர் 8 சுற்றின் நேற்று முன்தினம் நடைபெறவிருந்த போட்டி மழை காரணமாகக் கைவிடப்பட்டுள்ளது.

கொழும்பு ஆர். பிரேமதாச விளையாட்டரங்கில் நடைபெறவிருந்த குறித்த போட்டியில் நியூசிலாந்து மற்றும் பாகிஸ்தான் ஆகிய அணிகள் மோதவிருந்தன.

இதன்படி போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இருப்பினும் இடைவிடாத மழை காரணமாக போட்டி கைவிடப்பட்டுள்ளது.

இந்தநிலையில் குறித்த இரு அணிகளுக்கு தலா ஒவ்வொரு புள்ளி வழங்கப்பட்டுள்ளது. (3)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாவிடில் சிம் அட்டைகள் முடக்கப்படும்

## பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன

**(கொழும்பு) ..............................**

**இலங்கையில் முறையான அடையாள விபரங்கள் உறுதிப்படுத்தப்படாத சுமார் 9 இலட்சம் சிம் அட்டைகள் தற்போது பயன்பாட்டில் உள்ளதாகவும், தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாவிடில் அவை முடக்கப்படும் என்றும் டிஜிற்றல் பொருளாதார பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன தெரிவித்தார்.**



பாராளுமன்றத்தில் உரையாற்றிய வீரரத்ன, தற்போதுள்ள அமைப்பில் 8 இலட்சத்து 97 ஆயிரத்து 802 சிம் அட்டைகளுக்கு முறையான அடையாள உறுதிப்படுத்தல் இல்லை.

2019ஆம் ஆண்டு சிம் பதிவு கட்டமைப்பில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்யவும், பதிவுத் தேவைகளை முறையாக நடைமுறைப்படுத்துவதை உறுதி செய்யவும் இந்தப் புதிய விதிமுறைகள் இலக்கு வைத்துள்ளன.

தற்போது 2 இலட்சத்து 45 ஆயிரத்து 811 வணிக ரீதியிலான சிம் அட்டைகள் பயன்பாட்டில் உள்ளதாகவும், பதிவு செய்யப்படாத சில சிம் அட்டைகள் பாரிய அளவிலான கொள்ளைச் சம்பவங்கள் உள்ளிட்ட கடுமையான குற்றங்களுக்குப் பயன்படுத்தப் படுவதாகக் குற்றம் சுமத்தப் பட்டுள்ளது.

குற்றப் புலனாய்வு நடவடிக்கைகளுக்குச் சரியான சந்தாதாரர் தரவுகள் அவசியம் எனத் தெரிவித்த அவர், உறுதிப் படுத்தப்பட்ட தகவல்கள் இல்லாதது குற்றச் செயல்களுக்கு வழிவகுப்பதாக எச்சரித்தார்.

முறையான பதிவு விபரங்கள் இல்லாத சிம் அட்டைகளை பயன் பயன்படுத்துவோர், தேவையான தகவல்களை வழங்கவும் அவ்வாறு செய்யத் தவறினால் அந்தச் சிம் அட்டைகள் செயலிழக்கச் செய்யப்படும் என தெரிவித்தார். (8)

# வர்த்தக சம்மேளனத்தின் ஏற்பாட்டில் பல்துறை முயற்சியாளர்களுக்கு விருது

(யாழ்ப்பாணம்)

கனடா- இலங்கை ஆகிய நாடுகளின் கூட்டு வர்த்தக சம்மேளனத்தின் ஏற்பாட்டில் பல்துறைசார் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் விருது வழங்கும் நிகழ்வு எதிர்வரும் மே மாதம் 22 ஆம் திகதி யாழ்ப்பாணம் "ஜெ" தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெறவுள்ளது.

வர்த்தகம், விவசாயம், கடற்றொழில், சுற்றுலா உள்ளிட்ட பல்துறைசார் வர்த்தக பொருளாதார துறையில் இருக்கும் முயற்சியாளர்களை இனங்கண்டு குறித்த விருதுகள் வழங்கப்படுகின்றது.

அந்த வகையில் கடந்த வருடம் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

இந்த வருடம் மன்னார், புத்தளம் உள்ளிட்ட மேலும் பல மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கு விருதுகள் வழங்கப்படவுள்ளன. பிரதானமாக பெண்களின் திறமைகளுக்கு அங்கீகாரம் வழங்கப்படும்.

சிறிய, நடுத்தர வர்த்தக முயற்சியாளர்கள் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பிக்க விரும்புவோர் ஆளுநர், மாவட்டச் செயலர், பிரதேச செயலர் ஊடாக முழுமையான உறுதிப்படுத்தலுடன் எதிர்வரும் மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க முடியும்.

மேலும் கடந்த வருடம் 20 முயற்சியாளர்கள் விருதுகளைப் பெற்றிருந்த நிலையில் இந்த வருடம் 25 முதல் 30 வரையானோர் பெறும் வகையில் விருதுகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (8-33-104)

# கலந்துரையாடல்

(தருமபுரம்)

பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட மீனவர்களுக்கான உயிர்காப்பு அங்கிகள் வழங்கும் நிகழ்வும், மீனவர்கள் எதிர்நோக்கும் சமகாலப் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடலும் நேற்று முன்தினம் பூநகரி கடற்றொழிலாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் நிலையத்தில் நடைபெற்றது.

பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனின் 2 மில்லியன் ரூபாய் பன் முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ், பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட 16 கடற்றொழிலாளர் சங்கங்களைச் சேர்ந்த 584 மீனவர்களுக்கு குறித்த உயிர்காப்பு அங்கிகள் வழங்கி வைக்கப்பட்டன.

அத்துடன் சமகாலத்தில் மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பிலும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டன. (8-316)



விமானப்படையின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இரணைமடு விமானப்படையினரின் ஏற்பாட்டில் சிரமதானப்பணி முன்னெடுக்கப்பட்டது. A9வீதி கொக்காவில் பகுதியில் வீதியின் இருமருங்கிலும் காணப்பட்ட பிளாஸ்டிக் கழிவுகள் அகற்றப்பட்டன. (படம்- தேவானந்தன்)

# ஆசனப்பட்டி அணியாது பயணம்; 9 ஆயிரம் சாரதிகளுக்கு அபராதம்!

(கொழும்பு)

அதிவேக வீதிகளில் பயணித்த வாகனங்களில் ஆசனப்பட்டி அணியாது பயணித்த 9 ஆயிரம் சாரதிகள் மற்றும் பயணிகளுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பொலிஸ் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில், அதிவேக வீதிகளின் அனைத்து நுழைவு மற்றும் வெளியேறும் வாயில்களிலும் பொலிஸார் விசேட சோதனைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

சட்டத்தை முறையாக அமுல்படுத்துவதை உறுதி செய்வதற்காக இந்தச் சோதனைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

அதிவேக வீதிகளில் பயணிக்கும் போது சாரதிகள் மாத்திரமன்றி, வாகனத்திலுள்ள அனைத்துப் பயணிகளும் ஆசனப் பட்டிகளை அணிவது கட்டாயமாகும்.

பொதுமக்களின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு, இந்த விதிமுறையை எவ்வித விதிவிலக்கும் இன்றி கடுமையாக நடைமுறைப்படுத்துமாறு அதிவேக வீதிகளில் கடமைகளில் ஈடுபட்டுள்ள அனைத்து பொலிஸ் அதிகாரிகளுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (8)



கிளிநொச்சி பிரதேச அபிவிருத்தி வங்கியின் வடமாகாண ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

பிரதேச அபிவிருத்தி வங்கியில் கடமையாற்றிய அமரர்களான தெய்வேந்திரன் பகீசன் மற்றும் தனிக்க சஞ்சீவ சுமணதாச ஆகியோரின் நினைவாக குறித்த இரத்ததான முகாம் பிரதேச அபிவிருத்தி வங்கியின் கிளிநொச்சி கிளையில் இடம்பெற்றது.

(படம்- யதுபாஸ்கரன்)

# சட்டவிரோத வியாபார நடவடிக்கை 75 வெளிநாட்டவர்கள் கைது!

(கொழும்பு)

இலங்கைக்கு சுற்றுலா விசாவில் வருகை தந்து, சட்டவிரோத வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்ட 75 வெளிநாட்டவர்கள் கடந்த வருடம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் 15 பேர் நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

சுற்றுலா வலயங்களில் பதிவு செய்யப்படாத உணவகங்கள், விருந்தினர் விடுதிகள் மற்றும் தங்குமிட வசதிகளை நடத்துதல் போன்ற வணிக நடவடிக்கைகளில் இவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

வெளிநாட்டவர்கள் இச்சட்டவிரோத செயற்களில் ஈடுபட உள்ளூர் நபர்களைப் பயன்படுத்திக் கொள்வது விசாரணைகளுக்கு பெரும் சவாலாக இருப்பதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் புத்திக ஹேவாவசம் தெரிவித்துள்ளார்.

சுற்றுலா வலயங்களில் இவ்வாறான சந்தேகத்திற்கிடமான சட்டவிரோத வணிக நடவடிக்கைகள் குறித்து தகவல் தெரிந்தால், 1912 என்ற துரித இலக்கத்திற்கு அல்லது அந்தந்த பகுதிகளில் உள்ள சுற்றுலா பொலிஸ் பிரிவுகளுக்கு அறிவிக்குமாறு கோரப்பட்டுள்ளது. (8)

# கொலையில் முடிந்த காணித் தகராறு!

(கொழும்பு)

நீண்டகாலமாகக் காணப்பட்டு வந்த காணித் தகராறு முற்றியதில், தம்பி நடத்திய வாள்வெட்டுத் தாக்குதலில் அண்ணன் உயிரிழந்துள்ளார்.

இந்தக் கொடூர சம்பவம் கொழும்பு, ஹோமாகமை பிரதேசத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

சம்பவம் குறித்துத் தெரிய வருவதாவது, உயிரிழந்த நபருக்கும் அவரது தம்பிக்கும் இடையில் காணி விவகாரம் தொடர்பாக நீண்டகாலமாகப் பகை இருந்து வந்துள்ளது.

இந் நிலையில் இருவருக்கும் இடையில் மீண்டும் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இதன்போது ஆத்திரமடைந்த தம்பி, மறைத்து வைத்திருந்த வாளால் அண்ணனைச் சரமாரியாக வெட்டியுள்ளார்.

படுகாயமடைந்த அண்ணன் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியிலேயே உயிரிழந்துள்ளார். மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ள கிராம உத்தியோகத்தர்கள்

(கொழும்பு)

**கிராம உத்தியோகத்தர் சேவையில் தமக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்குத் தீர்வு கோரி, எதிர்வரும் மார்ச் மாதம் 03 ஆம் திகதி முதல் கடுமையான தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட கிராம உத்தியோகத்தர்கள் குழு தீர்மானித்துள்ளது.**

2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் சேவையில் இணைந்த கிராம உத்தியோகத்தர்கள், தமக்கு ஆரம்பத்திலிருந்தே இழைக்கப்பட்டு வரும் அநீதிகள் மற்றும் புறக்கணிப்புகளுக்கு எதிராக இந்த முடிவை எடுத்துள்ளனர்.

குறிப்பாக, தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய சேவைப் பிரமாணத்தினால் தமக்கு பாரிய பாதிப்புகள் ஏற்பட்டுள்ளதாக அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

2026 மார்ச் 02 ஆம் திகதியுடன் 17 வருடச் சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்யும் சுமார் 2,300 உத்தியோகத்தர்கள் (தற்போது சேவையிலுள்ளவர்களில் 25 சதவீதமானோர்) இந்தப் புதிய நடைமுறைகளால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் மற்றும் அமைச்சின் செயலாளருடன் பலமுறை பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்ட போதிலும், இதுவரை சாதகமான பதில்கள் எதுவும் கிடைக்கப்படவில்லை.

தமது கோரிக்கைகளை வலியுறுத்தி, எதிர்வரும் மார்ச் 03 ஆம் திகதி பொது நிர்வாக அமைச்சின் முன் பாக மௌனப் போராட்டமொன்றை முன்னெடுக்க இக்குழுவினர் தீர்மானித்துள்ளனர்.

இந்தப் போராட்டத்திற்கு ஏனைய கிராம உத்தியோகத்தர் தொழிற்சங்கங்களும், நிர்வாக கிராம உத்தியோகத்தர் சங்கங்களும் ஆதரவு வழங்க முன்வந்துள்ளன.

தமது நியாயமான கோரிக்கைகளுக்கு உரியத் தீர்வு வழங்கப்படாவிட்டால், எதிர்வரும் காலங்களில் தொழிற்சங்க நடவடிக்கைகளை மேலும் தீவிரப்படுத்தப் போவதாக 2009/2010 கிராம உத்தியோகத்தர்கள் குழு எச்சரிக்கை விடுத்துள்ளது. (8)

## பொதுநூலக நிறுவுநர் பிறந்தநாள் நினைவு தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பொது நூலகத்தின் நிறுவுநர் க.மு.செல்லப்பா அவர்களின் 130 ஆவது பிறந்தநாள் நினைவு தினம் யாழ். பொதுசன நூலகத்தில் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது. (8)

## கோடாவுடன் ஒருவர் கைது

(கொழும்பு)

களுத்துறை - மொறொந்துடுவ பகுதியில், சட்டவிரோத மதுபானம் மற்றும் கோடாவுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மொறொந்துடுவ பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய, நேற்று முன்தினம் சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்ட சோதனையின்போதே இந்த கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

இதன்போது, சந்தேகநபரிடமிருந்து 5 ஆயிரத்து 124 லீற்றர் கோடா மற்றும் 4.5 லீற்றர் சட்டவிரோத மதுபானம் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (8)

## ஏலவிற்பனை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் எதிர்வரும் 26 ஆம் திகதியன்று காலை 8.30 மணிக்கு மணல், கோடரி, சவள், வாச்சி, கத்தி என்பவற்றின் ஏல விற்பனை நடைபெறவுள்ளது.

ஏலவிற்பனைக்கான பொருட்களை ஏல விற்பனை ஆரம்பமாவதற்கு அரை மணித்தியாலம் முன்பாக பதிவாளரின் அனுமதியுடன் பார்வையிடலாம் என பதிவாளர் அறிவித்துள்ளார். (8)

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் எதிர்வரும் 27,28 ஆகிய திகதிகளில் காலை 9.30 மணிக்கு மோட்டார் சைக்கிள், கை உழவியந்திரம், வாகனம் என்பன ஏலவிற்பனை செய்யப்படும் என பதிவாளர் அறிவித்துள்ளார். (8)

# மன்னாரில் 4 உணவகங்கள் மீது சட்ட நடவடிக்கை



(மன்னார்)

மன்னார் நகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள உணவகங்கள் தொடர்ச்சியாக பல்வேறு சுகாதார குறைபாடுகளுடன் இயங்கி வருவதாக பொது மக்களால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கு அமைவாக அடையாளப்படுத்தப்பட்ட சில உணவகங்கள் மீது சுகாதார துறையினர் சட்டநடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

கடந்த வாரம் மன்னார் நகரசபை சுகாதார பரிசோதகர் மற்றும் மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை சுகாதார பரிசோதகர்கள் இணைந்து மேற்கொண்ட ஆய்வு நடவடிக்கையின் போது உரிய சுகாதார நடைமுறைகளை பின்பற்றாது இயங்கி வந்த 4 உணவகங்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது

மன்னார் தாழ்வுபாடு பிரதான வீதி வைத்தியசாலை பகுதியை அண்டிய உணவகங்கள் இரண்டின் மீதும் மன்னார் உப்புக்குளம் மற்றும் பள்ளிமுனை வீதியில் இரு உணவகங்கள் மீதும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (8-285)

# சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 400 | 300 | 300 |
| உருளைக்கிழங்கு | 160 | 160 | 150 | 160 |
| பச்சைமிளகாய் | 450 | 350 | 300 | 300 |
| தக்காளி | 160 | 140 | 150 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 180 | 200 | 200 |
| கோவா | 150 | 140 | 200 | 250 |
| கரட் | 250 | 380 | 400 | 400 |
| பூசணி | 120 | 120 | 150 | 150 |
| புடோல் | 150 | 200 | 200 | 250 |
| வாழைக்காய் | 200 | 200 | 150 | 250 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 160 | 180 | 200 | 200 |
| பாகற்காய் | 400 | 450 | 500 | 600 |
| வெண்டக்காய் | 350 | 300 | 200 | 200 |
| கருணைக் கிழங்கு | 300 | 280 | 300 | 300 |
| பயற்றங்காய் | 500 | 450 | 400 | 400 |
| லீக்ஸ் | 350 | 400 | 400 | 350 |
| பீற்றூட் | 200 | 200 | 200 | 200 |
| கறிமிளகாய் | 450 | 600 | 400 | 500 |
| முருங்கைக்காய் | -- | 3500 | 4000 | -- |
| போஞ்சி | 400 | 300 | 400 | 400 |
| கத்தரிதம்புள்ள | 200 | 250 | 300 | 200 |
| கீரை - 1 பிடி | 150 | 80-140 | 200 | 100 |
| தேசிக்காய் | 150 | 70 | 200 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 160 | 150 | 120-180 |
| இராசவள்ளி | 550 | 500 | 300 | 350 |
| வெங்காயப்பூ | 150 | 80 | 200 | 200 |
| முள்ளங்கி | 100 | 140 | 200 | 150 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 150 | 80 |
| வல்லாரை | 60 | 70 | 100 | 100 |
| ஈரப்பலா | 150 | -- | 100 | 120 |

# இலவச மருத்துவ முகாம்

(கரணவாய்)

யாழ் கத்தோலிக்க மருத்துவர்கள் அமைப்பினால் மாபெரும் இலவச மருத்துவ முகாம் ஒன்று எதிர்வரும் 01.03. 2026 ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 1 மணி வரை வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு றோ.க. த.க பாடசாலையில் நடைபெற உள்ளது.

இந்த இலவச மருத்துவ முகாமில் குருதியமுக்க பரிசோதனை, நீரிழிவு பரிசோதனை, இதய நோய்களுக்கான ஆலோசனைகள், பெண் நோயியல் மற்றும் கர்ப்பவதிகளுக்கான ஆலோசனைகள், புற்று நோய், பற் சிகிச்சை மற்றும் பற்சீரமைப்பு, கண் பரிசோதனை மற்றும் குழந்தை மருத்துவம், விசேடசத்திர சிகிச்சைக்கான ஆலோசனைகள் போன்ற மருத்துவ பரிசோதனைகள் இந்த இலவச மருத்துவ முகாமின் போது நடைபெறும்.

எனவே நோய் உள்ளவர்கள் மற்றும் நோயற்றவர்கள் அனைவரும் இந்த மருத்துவ முகாமில் கலந்து கொண்டு இலவசமாக தங்களை பரிசோதித்து ஆலோசனைகள் மற்றும் மருந்துகளை பெற்றுக் கொள்ளலாம் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (8-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனநாயகத்தை முடக்கியவர்களுக்கு தேர்தல் பற்றி பேச அருகதையில்லை

## அமைச்சர் வசந்த சமரசிங்க

(கொழும்பு)

**மாகாண சபைத் தேர்தலை உரிய காலத்தில் நடத்தாமல் நீண்ட காலமாகத் தடுத்து நிறுத்தியவர்களே இன்று தேர்தலை நடத்துமாறு சவால் விடுவது வேடிக்கையானது என்று அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.**


ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் தள்ளிப்போட்டு, ஜனநாயகத்தை முடக்கியவர்கள் யார் என்பது நாட்டு மக்களுக்குத் தெரியும்.

அன்று அதிகாரத்தில் இருந்தவர்கள் தேர்தலைப் பற்றிப் பேசவில்லை. இன்று தமக்கு மக்கள் செல்வாக்கு இருப்பதாகக் காட்டிக்கொள்ள முற்படுவது நகைப்புக்குரியது.

அரசு தற்போது கடந்த கால ஆட்சியாளர்களால் ஏற்படுத்தப்பட்ட சீரழிவுகளையும், பொருளாதாரக் குழப்பங்களையும் சரி செய்து கொண்டிருக்கின்றது. தேர்தலை நடத்துவதில் எங்களுக்கு எவ்வித அச்சமும் இல்லை. உரிய நடைமுறைகள் மற்றும் சட்டச் சிக்கல்கள் தீர்க்கப்பட்ட பின்னர், மாகாண சபைத் தேர்தல் நிச்சயமாக நடத்தப்படும். அப்போது மக்கள் யாருக்குப் பாடம் புகட்டுவார்கள் என்பதை நேரில் பார்ப்பார்கள் என்று தெரிவித்தார். (8)

# கிளிநொச்சி கனகாம்பிகை குளங்களை பாதுகாக்க நடவடிக்கை



(கிளிநொச்சி)

கிளிநொச்சி குளம் மற்றும் கனகாம்பிகை குளத்தின் கீழான நீரோட்ட பகுதிகளை மறுசீரமைப்பதற்கான களவிஜயம் மாவட்ட அரச அதிபர் எஸ்.முரளிதரன் தலைமையில் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த விடயம் தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட மட்டத்தில் விசேட கலந்துரையாடல் ஒன்று கடந்த 13 ஆம் திகதி நடைபெற்றது.

குறித்த கலந்துரையாடலில் குள ஒதுக்கப் பகுதிகள், சட்டவிரோத ஆக்கிரமிப்புகள், நில எல்லை நிர்ணயம், மற்றும் எதிர்கால பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

குளப்பகுதி மற்றும் குளத்தின் கீழான நீர் வழிந்தோடும் பகுதிகளில் சட்டவிரோதமாக மேற்கொள்ளப்படும் கட்டட நிர்மாணங்கள் மற்றும் நில பயன்பாடுகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டதுடன், அவற்றை கட்டுப்படுத்த துறைகள் இடையேயான ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

அதற்கமைவாக கள ஆய்வின் போது ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகள் நேரில் பார்வையிடப்பட்டு, நில எல்லைகள் அடையாளப்படுத்தப்பட்டதுடன், தேவையான சட்ட மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

மேலும் புனரமைப்பு வேலைகளை விரைவாக ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு மக்களின் ஒத்துழைப்பின் அவசியம் குறித்து நேரடியாக பொதுமக்களுக்கு தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# INVITATION FOR BID 2026/02
# VALIKAMAM NORTH PRADESHIYA SABHA, KANKESANTHURAI (Kollankaladdy)

1. **The Chairman, Local Authority Procurement Committee** on behalf of the **Chairman, Valikamam North Pradeshiya Sabha, Kankesanthurai (Kollankaladdy)** now invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB)**
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below.
   **"Bidders shall also register themselves with the Registrar of Public Contracts, Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987."**
4. Qualification requirements are indicated in section 4 of the **Bidding document.** Additional details are provided in the Schedule (Section5) for SBD 03 and Bidding Data and Contract Data (Section 05) for SBD 01.
5. Interested bidders may obtain further information from **address given below in 6** and inspect the bidding documents at the same place on any working days from **2026.02.23 to 2026.03.09** in between 09:00 hrs. and 15:00 hrs.
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Chairman, Valikamam North Pradeshiya Sabha, Kankesanthurai (Kollankaladdy) (T.P:021 2241130, Fax:021 224 3688) from 09:00 hrs to 15:00 hrs. During the period from 2026.02.23 to 2026.03.09 upon payment of non-refundable fees as mentioned in the table.** The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Local Authority Procurement Committee, Valikamam North Pradeshiya Sabha, Kankesanthurai (Kollankaladdy) on or before 10.30 a.m. at 2026.03.10** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at **Conference Hall, Valikamam North Pradeshiya Sabha, Kankesanthurai (Kollankaladdy).** commencing at **10.30 AM on 2026.03.03**
9. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | **Document Issuing/Purchasing Period** | | | **From 2026-02-23 To 2026-03-09** | | | | |
| | **Pre-Bid Conference** | | | **2026-03-03 at 10.30 AM** | | | | |
| | **Closing and Opening of Bids** | | | **2026-03-10 at 10.30 AM** | | | | |
| **Bid ID** | **Description of Work** | **Estimated Cost (Rs.) In Million (without VAT)** | **Contract Period (Days)** | **Grade Required** | **Non-Refundable Fee (Rs.)** | **Required Bid Security/ Bank Draft/ Security Deposit** | | **Bid Validity Period** |
| | | | | | | **Security Amount (Rs.)** | **Validity Period** | |
| NP/14/41(14)/05/01/520/CF-03/2026 | Interlock Paving Work of Bus stand at Thurkai Amman Kovil | 1.53 | 60 | C9 or above (Highway) | 3,000.00 | 15,000.00 | 26/05/2026 | 28/04/2026 |
| NP/14/41(14)/05/01/521/CF-04/2026 | Reconstruction of Senthankulam 2nd Left Lane | 3.23 | 60 | C9 or above (Highway) | 3,000.00 | 32,000.00 | 26/05/2026 | 28/04/2026 |
| NP/14/41(14)/05/01/522/CF-05/2026 | Reconstruction of Nesavussalai 1st Right Cross Lane at Veenankamam | 0.94 | 60 | C9 or above (Highway) | 3,000.00 | 10,000.00 | 26/05/2026 | 28/04/2026 |
| NP/14/41(14)/05/01/523/CF-06/2026 | Reconstruction of Milk Board Road at Naguleswaram | 3.42 | 60 | C9 or above (Highway) | 3,000.00 | 34,000.00 | 26/05/2026 | 28/04/2026 |
| NP/14/41(14)/05/01/524/CF-07/2026 | Construction of Two Storeyed Library Building at Alaveddy (Stage-II) | 24.47 | 180 | C6 or above (Building) | 5,000.00 | 245,000.00 | 23/06/2026 | 26/05/2026 |
| NP/14/41(14)/05/02/518/PSDG/CN/2026 | Construction of Saththurukan Canel at Senthankulam | 2.96 | 60 | C9 or above (Highway) | 3,000.00 | 30,000.00 | 26/05/2026 | 28/04/2026 |

**Chairman,**
**Local Authority Procurement Committee,**
**Valikamam North Pradeshiya Sabha,**
**Kankesanthurai(Kollankaladdy).**
**23.02.2026**


(C-5038)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## எண்ணெய் விநியோகம் தடைப்பட்டால் மின்சாரம் துண்டிக்கப்படும்!

### உக்ரைனுக்கு ஸ்லோவாக்கியா எச்சரிக்கை



(கீவ்)

ரஷ்யாவிலிருந்து உக்ரைன் வழியாக ஸ்லோவாக்கியாவிற்கு வரும் மசகு எண்ணெய் விநியோகத்தை மீண்டும் தொடங்க உக்ரைனுக்கு ஸ்லோவாக்கியப் பிரதமர் ரொபர்ட் பிகோ இரண்டு நாள் காலக்கெடு விதித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த நிபந்தனை நிறைவேற்றப்படாவிட்டால், உக்ரைனுக்கான மின்சார விநியோகம் நிறுத்தப்படும் என அவர் எச்சரித்துள்ளார்.

உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கிக்கு விடுத்த எச்சரிக்கையில், திங்கட்கிழமைக்குள் "துருஷ்பா" குழாய் வழித்தடம் மூலம் எண்ணெய் விநியோகம் சீராகாவிட்டால், SEPS எனும் அரசு நிறுவனத்தின் ஊடாக வழங்கப்படும் அவசர மின்சார விநியோகத்தை நிறுத்துமாறு கோரவுள்ளதாக பிரதமர் பிகோ தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனவரி மாத இறுதியில் ரஷ்யாவின் ட்ரோன் தாக்குதலால் உக்ரைன் எல்லைக்குள் உள்ள உட்கட்டமைப்புகள் சேதமடைந்ததைத் தொடர்ந்து இந்த எண்ணெய் விநியோகம் நிறுத்தப்பட்டது.

ஸ்லோவாக்கியா மற்றும் ஹங்கேரி ஆகிய நாடுகள் இன்னமும் ரஷ்ய எண்ணெயையே பெரிதும் நம்பியுள்ளன.

ஜனவரி 1, 2025 அன்று ஐந்து ஆண்டுகால ஒப்பந்தம் முடிவடைந்த பின்னர், உக்ரைன் ரஷ்ய எரிவாயு விநியோகத்தை நிறுத்தியது ஸ்லோவாக்கியாவிற்கு ஆண்டுக்கு 500 மில்லியன் யூரோக்கள் இழப்பை ஏற்படுத்துவதாக ரொபர்ட் பிகோ குற்றம் சாட்டியுள்ளார்.

உக்ரைன் தனது மின்சாரத் தேவையில் சுமார் 18 சதவீதத்தை ஸ்லோவாக்கியாவிடமிருந்தே பெறுகிறது. ரஷ்யத் தாக்குதல்களால் உக்ரைனின் மின்சாரக் கட்டமைப்பு பாதிக்கப்பட்டுள்ள நிலையில், ஸ்லோவாக்கியாவின் இந்த எச்சரிக்கை உக்ரைனுக்கு பெரும் சவாலாக அமைந்துள்ளது. (3)

## பாகிஸ்தானில் தலைவிரித்தாடும் வறுமை சுமார் 7 கோடி மக்கள் பாதிப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் வறுமை விகிதம் கடந்த 11 ஆண்டுகளில் இல்லாத அளவாக 28.9 சதவீதமாக உயர்ந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதேபோல், வருமான சமமின்மை கடந்த 27 ஆண்டுகளில் இல்லாத உச்சத்தை எட்டியுள்ளதாக அந்நாட்டின் திட்டமிடல் துறை அமைச்சர் அஹ்சன் இக்பால் வெளியிட்ட அதிகாரபூர்வ ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆய்வறிக்கையின்படி, சுமார் 7 கோடி மக்கள் தற்போது கடும் வறுமையில் வாடுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய ஒரு நபருக்கு மாதத்திற்கு . குறைந்தபட்சம் 8,484 ரூபா தேவைப்படும் நிலையில், அதற்கு கீழ் வருமானம் பெறுபவர்கள் கடும் வறுமையின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ளனர்.

கடந்த 7 ஆண்டுகளில் குடும்பங்களின் உண்மையான மாதாந்திர வருமானம் 12 சதவீதம் சரிந்து 31,127 ரூபாயாக உள்ளது.

பணவீக்கம் வருமான வளர்ச்சியை விட அதிகமாக இருப்பதே இதற்கு காரணமாகும்.

நாட்டின் வேலைவாய்ப்பின்மை விகிதம் 21 ஆண்டுகளில் இல்லாத அளவாக 7.1 சதவீதமாக உயர்ந்துள்ளது. வறுமையின் தாக்கம் கிராமப்புறங்களிலும் நகர்ப் புறங்களிலும் கணிசமாக அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (3)



## உயர் நீதிமன்ற

## மீண்டும் வரின

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி டொ


விதித்திருந்த பரவலான இற

சட்டவிரோதமானது என உ

தீர்ப்பளித்த 24 மணித்தியால

புதிய வரி உயர்வை அறிவித்

உலகளாவிய இறக்குமதி வரியை 10 சதவீதத் திலிருந்து 15 சதவீதமாக உயர்த்துவதாக நேற்று முன்



## சீனாவுக்கு அடுத்

## பயணமாகிறார் டொன



(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கடந்த 4 ஆம் திகதி அன்று சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்குடன் தொலைபேசியில் உரையாடினார்.

அப்போது, ட்ரம்ப் மற்றும் அவரது மனைவியை சீனா வரவேண்டும் என ஜி ஜின்பிங்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ...த்தின் தடையை மீறி ...யை அதிகரித்த ட்ரம்ப்



...னால்ட் ட்ரம்ப்
...க்குமதி வரிகள்
...யர் நீதிமன்றம்
...த்திற்குள், அவர்
...துள்ளார்.

தினம் சனிக்கிழமை தனது ட்ரூத் சமூக வலைத்தளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்த "அவசரகால அதிகாரங்களுக்கு" பதிலாக, 1974 வர்த்தகச் சட்டத்தின் பிரிவு 122இன் கீழ் இந்த வரிகளை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் விதித்துள்ளார்.

இந்த அதிகாரத்தின் கீழ் விதிக் கப்படும் வரிகள் அதிகபட்சமாக 150 நாட்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

அதற்கு மேல் நீடிக்க பாராளுமன்றத்தின் அனுமதி அவசியம் என தெரிவிக்கப்படுகிறது.

எனினும், நீதிமன்றத்தின் தீர்ப்பை "வேடிக்கையானது" மற்றும் "அமெரிக்காவிற்கு எதிரானது" என அமெரிக்க ஜனாதிபதி கடுமையாக குற்றம் சாட்டியுள்ளார்.

எவ்வாறாயினும், இந்த 15 சதவீத வரி உயர்வு இந்தியா உள்ளிட்ட பல நாடுகளின் ஏற்றுமதியைப் பாதிக்கும்.

இருப்பினும், கனடா மற்றும் மெக்சிகோ ஆகிய நாடுகளுக்கு இதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளதாக குறித்த பதிவில் தெரிவித்துள்ளார். (3)

## ஆப்கானிஸ்தான் மீது வான்வழி தாக்குதல் நடத்திய பாகிஸ்தான்

### 17பேர் உயிரிழப்பு

(காபுல்)

ஆப்கானிஸ்தானின் கானி கெலோ மற்றும் கார்டா சாமியா ஆகிய மாவட்டங்களில் பாகிஸ்தான் விமானப்படை நேற்று ஞாயிற்றுக்கிழமை வான்வழித் தாக்குதல்களை நடத்தியுள்ளதாக சர்வதேச ஊடக்ங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தத் தாக்குதல்கள் பொதுமக்களின் குடியிருப்புப் பகுதிகளைக் குறிவைத்து நடத்தப்பட்டதாக ஆப்கானிய வட்டாரங்கள் குற்றம்சாட்டுகின்றன.


இந்தத் தாக்குதலில் குறைந்தது சுமார் 17 பொதுமக்கள் கொல்லப் பட்டுள்ளதாக முதற் கட்டத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

மேலும் பலர் படுகாயமடைந்துள்ளதால் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.

பாகிஸ்தானுக்குள் அண்மைக்காலமாக அதிகரித்து வரும் பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு ஆப்கானிஸ்தானில் உள்ள குழுக்களே காரணம் என பாகிஸ்தான் குற்றம்சாட்டி வருகிறது.

இதன் தொடர்ச்சியாகவே இந்த "உளவுத் துறை அடிப்படையிலான" தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக பாகிஸ்தான் தரப்பு தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் இரு நாடுகளுக்கும் இடையே ஏற்கனவே நீடித்து வரும் எல்லை மோதலை மேலும் தீவிரப்படுத்தியுள்ளது. (3)



## ...த மாதம் ...ால்ட் ட்ரம்ப்

கேட்டுக்கொண்டார்.

இந்நிலையில், அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் மார்ச் 31ஆம் திகதி சீனா புறப்பட்டுச் செல்ல திட்டமிட்டுள்ளார். ஏப்ரல் 2ஆம் திகதிவரை சீனாவில் பயணம் மேற்கொள்கிறார்.

சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்கை சந்திப்பதற்காக ஜனாதிபதி ட்ரம்ப் ஏப்ரல் மாதம் பீஜிங் செல்வதாகத் தகவல் வெளியானது.

இதுதொடர்பாக அமெரிக்க ஊடகத்திற்கு ஜனாதிபதி ட்ரம்ப் அளித்த பேட்டியில், உலகின் சக்திவாய்ந்த இரு நாடுகளுக்கும் இடையில் நல்ல நட்புறவு உள்ளது என தெரிவித்தார். (3)

## ரஷ்யாவின் பைக்கால் ஏரியில் நிகழ்ந்த கோர விபத்து

### 7 சீனர்கள் உயிரிழப்பு



(மொஸ்கோ)

ரஷ்யாவின் சைபீரியா பகுதியில் உள்ள உலகப் புகழ்பெற்ற பைக்கால் ஏரியில் நிகழ்ந்த கோர விபத்தில் சீன சுற்றுலாப் பயணிகள் 7பேர் உயிரிழந்துள்ளனர்

கடந்த வெள்ளிக்கிழமை உறைந்திருந்த பைக்கால் ஏரியின் மேற்பரப்பில் சென்று கொண்டிருந்த ஒரு மினி-பேருந்து, பனிப்பரப்பில் ஏற்பட்ட விரிசல் காரணமாக ஏரிக்குள் மூழ்கியது.

இந்த சம்பவத்தில் 7 சீனச் சுற்றுலாப் பயணிகள் மற்றும் ரஷ்ய ஓட்டுநர் ஒருவரும் உயிரிழந்தனர்.

இதன்போது, பேருந்து ஏரியின் மேற்பரப்பில் சுமார் 3 மீற்றர் அகலமுள்ள ஒரு பனிப்பிளவில், சுமார் 59 அடி ஆழத்தில் மூழ்கியமை கண்டறியப்பட்டது.

எனினும், மீட்புப் படையினர் நீருக்கடியில் பயன்படுத்தப்படும் கமராக்கள் மற்றும் முக்குளிப்பவர்களின் உதவியுடன் ஏழு உடல்களையும் மீட்டனர்.

பேருந்தில் இருந்த ஒரு சீனச் சுற்றுலாப் பயணி மட்டும் அதிஷ்டவசமாகப் பேருந்து மூழ்குவதற்குள் வெளியேறி உயிர்தப்பினார். இந்தச் சம்பவத்தை அடுத்து, பைக்கால் ஏரியின் பனிப்பரப்பில் செல்வது தற்போது தடை செய்யப்பட்டுள்ளது.

இந்த விபத்து நிகழ்ந்த சில மணிநேரங்களில், மேலும் இரு இடங்களில் சிற்றூந்துகளுடன் பனிக்குள் சிக்கிய ஆறு பேர் மீட்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

உலகின் மிக ஆழமான ஏரியான பைக்கால், குளிர்காலத்தில் அழகாகத் தெரிந்தாலும், பனிப்படலத்தின் உறுதித்தன்மை குறித்து எச்சரிக்கையாக இருப்பது அவசியம் என உள்ளூர் நிர்வாகம் வலியுறுத்தியுள்ளதாக பி.பி.சி செய்தி வெளியிட்டுள்ளது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில்

# 82 ஆயிரத்து 170 வெடி பொருட்கள் மீட்பு

## ஸார்ப் நிறுவனம்

**(கண்டாவளை) ••••••••••••••••••••••••••**

**முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் இதுவரை 37 இலட்சத்து 78 ஆயிரத்து 161 சதுரமீற்றர் பரப்பளவிலிருந்து 82 ஆயிரத்து 170 அபாயகரமான வெடிபொருட்களை அகற்றியுள்ளதாக ஸார்ப் நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் ஓய்வுபெற்ற கப்டன் பிரபாத் நாரம்பனவ தெரிவித்துள்ளார் .**

இலங்கையின் வட பகுதியில் மனிதாபிமான கண்ணிவெடி யகற்றலில் ஜப்பான் மற்றும் அமெரிக்கா நாடுகளின் நிதியுதவியுடன் நிலக்கண்ணி வெடிகளை அகற்றும் பணிகளில் ஈடுபட்டுவரும் ஸார்ப் மனிதாபிமானக் கண்ணிவெடியகற்றும் அரசசார்பற்ற நிறுவனமானது கடந்த 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் 2026 பெப்ரவரி மாதம் வரையான காலப் பகுதியில் முல்லைத்தீவு மாவட்ட த்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள தச்சடம்பன், அம்பகாமம், ஒழுமடு மற்றும் மாங்குளம், கொக்காவில் ஆகிய பகுதிகளிலும் கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப் பள்ளி பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள முகமாலை, கிளாலி, இயக்கச்சி மற்றும் ஆனையிறவிலும் கண்டாவளை பிரதேச செயலக பிரிவின் கீழ் உள்ள தட்டுவன் கொட்டி பகுதியிலும் 37 இலட்சத்து 78,161 சதுரமீற்றர் பரப்பளவிலிருந்து 82 ஆயிரத்து 170 அபாயகரமான வெடிபொருட்களை அகற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-315)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு:1984- இந்து<br>நட்சத்திரம்: ரோகிணி<br>கி.பா-40<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: O/L , Driver<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/16573 | பிறப்பு:1991-இந்து<br>நட்சத்திரம்- பரணி 2 இல் செவ்<br>கி.பா -15<br>உயரம்-5'4"<br>தகைமை/தொழில்: BBM,DO<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்<br>தொ.இ: G/16591 |
| பிறப்பு:1996-இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>12இல் செவ்<br>கி-பா-27<br>உயரம்:5'7"<br>தகைமை/தொழில்- BSc, Engineer<br>எதிர்பார்ப்பு: உயர் பதவிகள்<br>தொ.இ: B/16574 | பிறப்பு:1995-RC<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்-BBM,Accountant<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/16594 |
| பிறப்பு:1993-இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>8இல் செவ்<br>உயரம்:5<br>தகைமை/தொழில்:A/L, Business<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/16575 | பிறப்பு:1990- RC<br>உயரம்-5'3"<br>தகைமை/ தொழில்: Degree,TO<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்<br>தொ.இ: G/16595 |
| பிறப்பு: 1997- இந்து<br>நட்சத்திரம்:பரணி<br>கி.பா-13 1/2<br>உயரம்:6"<br>தகைமை/தொழில்-Dip in QS,Shop (own)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/16576 | பிறப்பு:2000-இந்து<br>நட்சத்திரம்:அத்தம்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில் -BSc,Demo<br>எதிர்பார்ப்பு: உயர்தொழில்<br>தொ.இ: G/16596 |
| பிறப்பு: 1997- இந்து<br>நட்சத்திரம்:-மிருகசீரிடம் 1 இல் செவ்<br>கி-பா-71 1/2<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்: Dip in Nursing, Nurse<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/16578 | பிறப்பு:1999-இந்து<br>நட்சத்திரம்:பூராடம்<br>உயரம்:5'<br>தகைமை/தொழில்:BSc, Assistant Lecturer<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்<br>தொ.இ: G/16598 |

**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 076 097 3120**
**E-mail:- kalyanamalai.jaffna@gmail.com**
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்**


# இன்று ஒரு தகவல் 546

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



## சுற்றுச் சூழல்

இதுவரைக்கும் நாம் அடிக்கடி கவலைப்பட்டது மனிதனிடம் இருந்து மனுதனைக் காப்பாற்றுவது எப்படி என்பதற்காகத் தான். ஆனால் இனிமேல் அதைவிட பெரிய கவலை ஒன்று வந்து விட்டது. அது என்ன என்றால்.

மனிதனிடமிருந்து பூமியைக் காப்பாற்றுவது எப்படி? இதுதான் இன்றைக்குப் பெரிய கவலை! மனிதனுக்குக் கோபம் வந்தால் "சூடா ஆயிட்டான்" என்று சொல்வது உண்டு... இப்ப பூமிக்குக் கோபம் வந்து விட்டது. அது சூடா ஆகிக்கொண்டிருக்குது. பூமிக்கு கோபத்தை உண்டாக்கியது யாரு? மனிதன் தான்! இன்னும் 25 வருடத்திலே பூமியின் உஷ்ணம் சராசரி 1 முதல் 2 டிகிரி வரைக்கும் அதிகரிக்கும் என்று விஞ்ஞானிகள் சொல்கிறார்கள். சில பகுதிகளிலே 6 டிகிரி வரைக்கும் கூட அதிகம் ஆகலாமாம்! சரி . ஆயிட்டுப் போகுது. அதனாலே நமக்கென்ன? என்று இருந்துவிட முடியாது! அதனாலே பல பாதக விளைவுகள் ஏற்படும். உதாரணத்துக்கு ஒன்று பார்ப்போம்.

பூமியின் வெப்பம் அதிகரிக்கும்போது வட துருவம், தென்துருவம் இங்கேயெல்லாம் இருக்கிற பிரம்மாண்டமான பனிக்கட்டிகள் உருக ஆரம்பிக்கும். அதனாலே கடல் மட்டம் உயரும் பல தீவுகள் மூழ்க வேண்டிய நிலைமைக்கு ஆளாகிவிடும். உலகம் முழுவதும் கடல் ஓரப்பகுதிகள் மூழ்கும். அங்கே இருக்கிறவர்கள் எல்லாம் வேறு இடம் பார்க்க வேண்டியதுதான்!

உதாரணத்துக்கு கடல்மட்டம் 1 மீற்றர் உயர்ந்தால் வங்கதேசத்திலே 4 லேயிருந்து 8 கோடி மக்கள் வேறு இடம் தேட வேண்டியிருக்கும்!

சரி... பூமி கோபப்படும் அளவுக்கு மனிதன் செய்த தவறுதான் என்ன?

இயற்கையின் சமநிலையைக் கெடுத்துவிட்டான்.

நாம் பிராண வாயுவை எடுத்துக் கொண்டு கார்பன் டை ஆக்சைடை வெளியிலே விடுகிறோம். இந்த கார்பன் டை ஆக்சைடை மரம் செடி கொடியெல்லாம் எடுத்துக் கொண்டு பிராணவாயுவை வெளியிலே விடுது. இது ஒழுங்கா நடந்து கொண்டிருந்தால் சரி.. ஆனால் காடுகளை மனிதன் அழிக்க ஆரம்பித்தான். கார்பன்டை ஆக்ஸைடு சேர்ந்து போய்விட்டது அதையெல்லாம் மாற்றிக் கொடுக்கிறது யாரு? இதைத் தவிர வாகனங்கள் தொழிற்சாலைகள் விடுகிற புகை வேறு காற்றில் கலக்குது!

சூரியன் உமிழும் அல்ட்ரா வயலட் கதிர்களிடம் இருந்து உயிரினங்களை பாதுகாக்கிற கேடயம் ஓசோன் படலம். இது தேய்ந்து கொண்டு வருது! C.F.C என்று சொல்றாங்களே குளோரோஃப்ளூரா கார்பன் இந்த ரக ரசாயனத்தை ரெப்ரிஜ்ரேட்டர், ஏர்கண்டிஷனர் தீயணைப்புக் கருவிகள் இதிலேயெல்லாம் குளிர்ச்சியை ஏற்படுத்துறதுக்காக உபயோகப் படுத்துகிறோம். இது தான் ஓசோனுக்கு எமன். C.F.C ஒரு மாலிக்யூல் ஒரு லட்சம் ஓஸோனை மாலிக்யூலை அழிக்கக் கூடியதாம்!

இதற்கு மாற்றுப் பொருள் கண்டுபிடிக்க வேண்டும்.

இயற்கையுடன் அனுசரித்துப் போக வேண்டியதன் அவசியத்தை இப்பத்தான் தீவிரமாக உணர ஆரம்பித்திருக்கின்றோம். அதுக்காகத்தான் உலகத் தலைவர்கள் எல்லோரும் ஒன்று கூடி யோசிக்க ஆரம்பித் திருக்கிறார்கள்.

இந்த உலகத்திலே மரம், செடி, கொடிகள், மிருகங்கள், பறவைகள் எல்லாம் சௌக்கியமாக இருந்தால்தான் நாங்களும் சௌக்கியமா இருக்க முடியும்! குஜராத் வடபகுதியிலே ஆரவல்லிக்குன்று சரிவின் மையத்திலே மிருகங்கள் பறவைகளுக்கென்றே ஒரு கோயில் இருக்கு அதிலே பறவைகள், மிருகங்கள் சிற்பங்கள்தான் இருக்கு. கர்ப்பக் கிரகத்திலேயும் அதே சிலைகள்தான். அங்கே வணங்கப் படும் தெய்வங்கள் பறவைகளும் விலங்குகளும் தான்.

தெய்வீகக் கதைகளில் எல்லாம் தெய்வங்கள், மிருகங்களையும் பறவைகளையும் வாகனமாக வைத்திருக்கிறார்கள் என்று சொல்வதெல்லாம் எதுக்காக? அதோட மதிப்பை புரிந்து கொள்வதற்காகத்தான்.

அசோக மன்னர் வீதியோரத்துலே எல்லாம் மரங்கள் நட்டார் என்று சரித்திரத்திலே படிக்கிறோமே அவர் என்ன விவரம் தெரியாமலா செய்சார்?

மிருகங்களுக்கும் மருத்துவமனைகள் நிறுவினார் அசோகர் அப்படி என்று படிக்கிறோமே! கி.பி.17 ஆம் நூற்றாண்டுலே எழுதப்பட்ட நூல் நீதிசாரம். அது ஓலைச்சுவடியா இருக்கு. தமிழ்நாடு தொல்லியல்துறை தர்மபுரியிலே அதை கண்டுபிடிச்சு எடுத்திருக்கு. அதிலே என்ன எழுதியிருக்கு தெரியுமா?

மரம் வளர்த்தால் நரகம் இல்லை, அப்படி என்று எழுதி இருக்கு.

அந்த அளவுக்கு அப்பவே தெரிந்துள்ளார்கள். ஆல், அரசு, வேம்பு இந்த மரங்களையெல்லாம் தெய்வமாக நினைத்து வழிபடும் பழக்கம் இப்பவும் கூட உண்டு! இருந்தும் என்ன பிரயோஜனம்? உலகச் சுற்றுச்சூழல் மிகவும் கெட்டுப் போச்சாமே! இனிமே எல்லாம் நாம் மிகவும் எச்சரிக்கையா இருக்க வேண்டும். இயற்கையின் படைப்புக்களை அழிக்கிறதுக்கு முயற்சி செய்யக்கூடாது. சிலர் எதுக்கும் கவலைப்படுவதில்லை. மிகவும் அலட்சியம்! அலுவலக நண்பர் ஒருத்தரிடம் நான் சீரியஸா சொல்லிக் கொண்டிருந்தேன். இப்படியே போய்க்கொண்டிருந்தால் ஒரு நாள் பெரிய பிரளயமே வந்துவிடும்.. கடல் கொந்தளிக்கும்.. சூறாவளி வீசும்.. எரிமலை வெடிக்கும்.. பூகம்பம் வரும்..! அப்படி என்றேன்.

அவர் மிகவும் சாவகாசமா என்னைப் பார்த்து, "அன்னைக்கு அலுவலக விடுமுறை விடுவாங்களா சார்?" அப்படி என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## பூப்பெய்திய பெண்களின் ஆரோக்கியமான பாரம்பரிய உணவுகள்






டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

பூப்படைதல் (Puberty) காலக் கட்டத்தில் உடல் மற்றும் ஹார் மோன் மாற்றங்கள் ஏற்படும். இந் தச் சமயத்தில் இரும்புச்சத்து (iron), கல்சியம், புரதம், மற்றும் துத்தநாகம் (Zinc) நிறைந்த சரி விகித உணவு அவசியம். உளுந்து, களி, கருப்பட்டி, நல்லெண் ணெய், எள்ளு சேர்த்த உணவுகள், சிவத்த பச்சரிசியில் தயாரித்த உணவு கள், பலகாரங்கள், வெந்தயம், முட்டை, பாலும் பால் சேர்ந்த உணவுகள், பச்சை இலை, காய்கறிகள், நட்ஸ் மற்றும் உடன் பழங்கள் முந்திரிவற்றல் போன் றவற்றை தினமும் மாறி மாறி உண வில் சேர்த்துக் கொள்ள வேண்டும். இது உடலை வலுப்படுத்தவும், ஆரோ க்கியமான வளர்ச்சிக்கும் உதவும். கறுப்பு உளுந்திலிருந்து தயாரிக்கப்பட்ட உளுத்தங்களி, உளுந்து புட்டு இடுப்பு எலும்பு வலுவடையவும், மற்றும் மாத விடாயச் சுழற்சி சீராக நடைபெறவும் உளுந்து உணவுகள் அவசியம். கருப் பட்டி இரும்புச்சத்து குறைபாட்டை போக்கவல்லது. மாதவிடாய் ஆரம்ப த்தில் இரத்தப் போக்கையும் ஈடுசெய் யக் கூடியதாகவும் அமையும். எள்ளு ருண்டை சேர்ந்த உணவுகள் இரும்புச் சத்து, கல்சியம் சத்துக்கள் நிறைந்த தாகும். அத்துடன் நல்ல கொழுப்புகள் அடங்கியதாகவும் இருக்கும்

பூப்படைந்தவுடன் ஏற்படும். இரத்த இழப்பை சரிசெய்ய முருங்கை, அரைக்கீரை போன்ற கீரைவகைகள், பேரிச்சம்பழம், மாதுளை, உலர்ந்த திராட்சை, முட்டை மற்றும் இறைச்சி உணவுகளை சேர்த்துக் கொள்ள வேண்டும். இடுப்பு எலும்பு போன்ற என்பு வளர்ச்சிக்கு பால், தயிர், மோர், பனீர் மற்றும் சிறுதானியங்களை அதிகம் உட்கொள்ள வேண்டும். புரதம் மற்றும் ஆரோக்கியமான கொழுப்பு உடம்பில் சேர பருப்பு வகைகள், கடலை, முட்டை, மீன் மற்றும் பாதாம் பருப்பு போன்றவை அவசியமாகும். ஹார் மோன் மாற்றங்களை சீக்கிரமாக ஊக்குவிக்கும் பதப்படுத்தப்பட்ட உணவுகள், பைக்கெற் உணவுகள், அதிக சர்க்கரை, மற்றும் கோதுமைமா சேர்ந்த உணவுகளை தவிர்க்க வேண்டும். பூப்படையும் காலத்தில் பெண்கள் உடல் அளவிலும், மனதளவிலும் நடக்கக்கூடிய மாற்றங் களையும், உடல் உறுப்புகள் ஆரோக் கியமாக இருப்பதற்கும் ஒரு முக்கிய மான கால கட்டத்தை எதிர்கொள்ள வேண் டி இருப்பதால் மேற்கூறிய உணவு வகை கள் எடுத்துக் கொள்வது அவசியமாகும். அரைக்கீரை விதை கள் ஒரு தேக்கரண்டி அளவு எடுத்துக் கொள்ளலாம்.

இது கரு முட்டையின் ஆரோக்கியம், வளர்ச்சி இரண்டிற்கும் அவசியமாகும். பூப்பெய்திய நாளில் இருந்து அடுத்த மூன்று நாட்கள் வேப்பிலையுடன் மஞ்சள் ஒரு துண்டு சேர்த்து அரைத்து சாப்பிடலாம். பூப்பெய்திய மூன்றாவது நாளிலிருந்து பத்து நாட்கள் வரை கறுப்பு உளுந்து, குரக்கன், கம்பு, எள்ளு சேர் த்து இடித்து உருண்டையாக்கியும் கொடு க்கலாம். சுவைக்காக கருப்பட்டி சேர்த்துக் கொடுக்கலாம். தினமும் நாட்டுக் கோழி முட்டை, நல்லெண்ணெய் கொடுப்பது சிறந்ததாகும். சிவப்பு அரிசி, கறுப்பு உளுந்தைச் சேர்த்து பொடி பண்ணி நல்லெண்ணெய் சேர்த்து களியாக்கி கொடுப்பதன் மூலம் Pelvic Floor Muscles Streng then ஆகும். உளுந்து கருமுட்டை ஆரோக்கிய த்திற்கு மிகவும் ஏற்றதாகும். அடு த்து வரக்கூடிய பதினைந்து நாட்க ளுக்கு சிவப்பு பச்சரிசி, வெந்தயம் சேர்த்து வறுத்து பொடித்து கஞ்சி செய்து தேங் காய்ப்பால் சேர்த்துக் கொடுக்க வேண்டும். இதனால் ஹார்மோன்களின் செயற் பாடுகள் ஒழுங்காக நடைபெறும். மேலும் உடம்பை குளிர்ச்சியாகவும் வைத்திருக்க உதவும்.குறிப்பாக இது போன்ற நல்ல கொழுப்பு அமிலங்கள் உள்ள உணவு களை கொடுப்பதனால் அவர்களுடைய உடம்பில் ஆரோக்கிய மான கருமுட்டைகள் வளரும். இது போன்று பூப்பெய்திய பெண்களுக்கு ஆறுமாத காலம், மேலே சொன்ன உணவுகளை முறையாகக் கொடுத்து வரும் போது மாதவிடாய் பிரச்சினை களால் ஏற்படும் உபாதைகள் வராமல் தடுக்க முடியும். இந்த உணவு முறை களை தொடர்ந்து கொடுக்கும் போது பெண் கள் ஆரோக்கியமாக வளருவார்கள். முக்கியமாக கறுப்பு உளுந்து சேர்ந்த களி, புட்டு போன்ற உணவுகள் ஈஸ்டரோஜன், புரோஜெஸ்டிரோல் ஆகிய ஹார்மோன் கள் சீராக செயற்பட உதவுகின்றன.

பொட் டுக் கடலை ஒரு தேக்கரண்டி அளவு இளறுப்பாக வறுத்து சாப்பிடலாம். என்புகளை வலுப்படுத்தக்கூடியது. சுண்டல், கொண்டல்கடலை வகைகளை சத்துமாவில் கலந்து பயன்படுத்தலாம். இவை கருப்பை ஆரோக்கியத்திற்கு மிகவும் உகந்தது. சிவப்பு அவலும் தாராளமாக சேர்த்துக் கொள்ள வேண்டும். இவ் உணவு முறைகள் Post Pu berty உணவுமுறையாகும். அதா வது பெண்களுக்கு முதல் மாதவிடாய் வந்து அதாவது பூப்பெய்த நாளிலிருந்து ஆறு மாதங்கள் வரை மேற்கொள்ள வேண்டும். அதே போன்று தற்காலத்தில் வாழ்வியல் மாற்றத்தால் Early Puberty ஏற்பட வாய்ப்புண்டு. அதாவது 9-10 வயது சிறுமியாக இருக்கும் போதே பூப்ப டைந்து விடுகிறார்கள். இதை தவிர்க்க Preservatives செயற்கை பாதுகாப்புப் பொருட்கள் சேர்ந்த உணவுகளை தவிர்த்து அப்பப்போ கிடைக்கும் காய் கறிகள், பழங்களை பயன்படுத்த வேண்டும். சிறந்த உடற்பயிற்சி தோப்பு கரணமாவது 10 தடவைகள் தினமும் மேற்கொள்ளலாம். தூக்கம் இன்றிய மையாதது. இரவு 10 மணிக்குள் தூங்கி காலை 6 மணிக்குள் எழுந் திருக்க வேண்டும். மனஅழுத்த மில்லாத வாழ்க்கையை குடும்பத்தார் ஏற்படுத்த வேண்டும். மரபணு மாற்ற ப்பட்ட (Genertically Modified) உணவுகளை தவிர்க்க வேண்டும். இப்பழக்கங்கள் ஹார்மோன் செயற் பாடுகளை சீராக செயற்படுவதை தடுக்கும்.



## இராசிபலன்

23.02.2026
மாசி 11 , திங்கட்கிழமை
சஷ்டி முற்பகல் 10.14 மணிவரை
பரணி பிற்பகல் 5.33 மணிவரை

சுப நேரம் 12.30-2.00 மணிவரை
இராகு காலம் 8.00-9.30 மணிவரை
கார்த்திகை விரதம்

சந்திராஷ்டமம்:
அத்தம், சித்திரை

வளவன்

**மேஷம்** சிலர் மீது காரணமில் லாமல் கோபம் ஏற்பட லாம், நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், எடுத்த காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், போசன சுகமுண்டு.

**கடகம்** கண்ணியம் மிக்க ஒரு வரின் சந்திப்பு இடம் பெறலாம், தலைமைப் பொறுப்புக்கள் உங்க ளைத் தேடி வரலாம், ஒளிமயமான வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நாள்.

**துலாம்** பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், பொது நல னில் அக்கறை கூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், புதிய பொருட் சேர்க் கையுண்டு.

**மகரம்** வர வேண்டிய பணவர வுகள் வந்து சேரலாம், இயல்பான வாழ்க்கை யில் இன்பங்கள் கூடும் நாள், புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**ரிஷபம்** பொறுப்பாக வேலை களைச் செய்தாலும் ஏதாவது பழிச் சொல் லுக்கு ஆட்பட நேரிட லாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், சிந்தித்துச் செயற்பட வேண்டிய நாள்.

**சிம்மம்** எதிர்ப்புக்கள் அகன்று வியாபார விருத்தி ஏற்படலாம், தித்திக் கும் பயணங்கள் இடம் பெறலாம், சமார்த்தியமாகப் பேசி காரியம் சமாளிப்பீர்கள், ஆன்றோ ர்கள் சந்திப்புண்டு

**விருச்சிகம்** பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், பணத்தேவைகள் எளி தில் பூர்த்தியாகும், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், கௌரவமான நாள்.

**கும்பம்** தன்னம்பிக்கையும் துணி வும் அதிகரிக்கும், பாதி யில் சிறு மன உளைச் சல் ஏற்படலாம், எதற்கா கவும் பிடிவாதம் செய்வதை தவிர்ப் பது நல்லது, பொன்னான நாள்.

**மிதுனம்** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெற லாம், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம்.

**கன்னி** மற்றவர்களை விமர்சி பதை தவிர்ப்பது நல் லது, கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், பிரயாண பயமுண்டு, ஆரோக்கியத்தில் அக் கறை தேவை.

**தனுசு** புத்திசாதுரியமான செய ற்பாடுகளால் புகழ் பெறு வீர்கள், உறவினர் வழி யில் அன்புத் தொல்லை கள் ஏற்படலாம், காலை நேரத்தி லேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம்.

**மீனம்** குடும்பத் தேவைகள் நிறைவு செய்யும் எண் ணம் உருவாகும், பாரா ட்டும் புகழும் கூடும், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வாக்கு மேன்மையுண்டு.

**மனிதனுக்கு நன்றி செலுத்தாதவன் இறைவனுக்கு நன்றி செலுத்த மாட்டான்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கல்கியின்** **பாகம் - 4**

# பொன்னியின் செல்வன்

## காவியத் தொடர் 985





“வல்லவரையனையா சொல்கிறாய்?”

“ஆமாம் புலியின் தலையைக் கொண்டு வராமல் வெறுங்கையுடனே வருகிறானே, அவன்தான். ஒரு நாள் அவன் தஞ்சையில் என்னைப் பார்த்தான்.

என்னுடைய பாதம் அவன் பேரில் பட்டால் அதை ஒரு ‘பாக்கியமாகக் கருதுவேன்’ என்று சொன்னான். அவனை என் காலால் தொட்டு உதைக்கவும் நான் இஷ்டப்படவில்லை. வேலைக்காரர்களை அழைப்பதாகச் சொன்ன பிறகு ஓடி விட்டான். அவனுடைய நீசத்தனமான எண்ணத்துக்கு நான் இணங்காததற்காகத் தங்களிடம் இத்தகைய பயங்கரமான கற்பனைகளைப் புனைந்து சொல்லியிருக்கிறான்.

நான் விரும்பினால் தங்களுடைய தலையையே கொண்டு வந்து விடுவதாக உறுதி கூறினான். இதையெல்லாம் தங்களிடம் நான் சொல்லி விடப் போகிறேனோ என்று அவனுக்குப் பயம்.

அதற்காகவே தாங்கள் கடம்பூர் மாளிகைக்கு வராமல் வழியிலே தடுத்து விடப் பார்த்தான். அதனாலேயே தங்களுடன் இணை பிரியாமல் சுற்றி வந்து கொண்டிருக்கிறான்.

அப்படிப்பட்ட நீசன், என் காலினால் தொடுவதற்குக் கூட நான் விரும்பாதவன், அவன் என் உடம்பு முழுவதையும் அணைத்துத் தூக்கிக் கரையேற்றும்படி செய்தீர்கள். அதைப் பார்த்துக் கொண்டுமிருந்தீர்கள்.

இதை நான் மறக்க முடியுமா? அல்லது மன்னிக்கத்தான் முடியுமா?”

இவ்விதம் நந்தினி கண்களில் கோபக்கனல் பொங்கக் கூறி வந்த பயங்கரமான மொழிகளைக் கேட்டுக் கரிகாலருடைய தலை உண்மையிலேயே சுழலத் தொடங்கியது. பளிங்கு மண்டபம், ஏரியின் நீர், காட்டு மரங்கள் எல்லாம் சுழன்றன.

சற்று நிதானித்துக் கொண்டு, “சகோதரி! நந்தினி! நீ சொல்வது உண்மையாக இருக்க முடியுமா? எதை நம்புவதென்று எனக்கு மெய்யாகவே தெரியவில்லை. வந்தியத்தேவன் அவ்வளவு நீசனாக இருக்கக் கூடுமா? அவனுக்கு இந்தப் பேதைப் பெண் மணிமேகலையைத் திருமணம் செய்விப்பது என்று சற்று நேரத்துக்கு முன்னால் கூட எண்ணினேனே?” என்றார்.

“ஐயா! நான் சொல்வதை மட்டும் நீங்கள் நம்பிவிட வேண்டாம். எப்போதுமே அவசரப்பட்டுத் தாங்கள் காரியம் செய்து விடுவீர்கள். இந்தத் தடவை அப்படிச் செய்ய வேண்டாம். இரண்டு நாள் பொறுத்திருந்து இவனுடைய நடவடிக்கைகளைக் கவனித்து வாருங்கள். தாங்களே தெரிந்து கொள்வீர்கள்!” என்றாள் நந்தினி.

### 46ஆம் அத்தியாயம்
### படகு நகர்ந்தது!

வந்தியத்தேவன் ஒரு பக்கத்தில் விரைந்து வந்து கொண்டிருந்தான். மற்றொரு புறத்தில் மணிமேகலை, “அக்கா! உணவு சித்தமாயிருக்கிறது!” என்று சொல்லிக் கொண்டு நெருங்கி வந்து கொண்டிருந்தாள்.

கரிகாலர் இருபுறமும் பார்த்துவிட்டு, “நந்தினி, என்னைக் கடம்பூர் மாளிகைக்கு வரவேண்டாம் என்று தடுக்க வந்தியத்தேவன் மட்டும் முயலவில்லை. ஆழ்வார்க்கடியான் என்னும் வைஷ்ணவனும் அதே மாதிரி செய்தியைக் கொண்டு வந்தானே!

(தொடரும்....)



# சிறுவர் அரங்கம்

## தராவிட்டால் தலை வணங்கு



நண்பனிடம் சென்ற ஒருவன், “எனக்கு ஆயிரம் ரூபாய் அவசரமாகத் தேவைப்படுகிறது. உன்னையே நம்பி இருக்கிறேன். எப்படியும் கடன் கொடு” என்று கேட்டான்.

அதற்கு அந்த நண்பன், என்னிடம் இப்பொழுது பணம் இருக்கிறது. ஆனால் நான் உனக்குத் தரப்போவது இல்லை. அதற்காக நீ என்னிடம் நன்றி பாராட்ட வேண்டும்” என்றான்.

இதைக் கேட்டதும் அவன் கோபத்துடன் உன்னிடம் பணம் இருக்கிறது. ஆனால் எனக்குக் கொடுக்க விரும்பவில்லை என்கிறாய். இதை நான் ஏற்றுக் கொள்கிறேன். அதற்கா்க உன்னிடம் நன்றி பாராட்ட வேண்டும் என்று சொன்னாயே. என்னை என்ன மடையன் என்றா நினைத்துக் கொண்டாய்?” என்று கத்தினான்.

அதற்கு அந்த நண்பன், “நான் சொல்வதைப் பொறுமையாகக் கேள். பிறகு நீயே முடிவுக்கு வா” என்றான். “என்ன சொல்ல விரும்புகின்றாய்? சொல்லித் தொலை” என்றான் அவன். “நீ என்னிடம் பணம் கேட்டாய். நாளைக்கு வா என்று நான் சொல்லி இருக்கலாம்.

மறுநாள் நீ வந்தால் இன்றைக்கும் என்னால் பணம் புரட்ட முடியவில்லை நாளைக்கு வா என்று சொன்னால் நீ அடுத்த நாள் வருவாய். இப்படியே ஒரு வாரம் இழுத்தடித்த பின், எனக்கு மிகவும் வருத்தமாய் உள்ளது. அடுத்த வாரம்தான் என் கைக்குப் பணம் வரும் போல் தெரிகிறது.

ஆகவே அடுத்த வாரம் வா என்று சொல்லலாம், இப்படியே உன்னை அலைக்கழித்துக் கொண்டு இருக்கலாம்.

இதற்காகவே நீ அலைந்து கொண்டிருப்பதால் வேறு யாரிடமும் சென்று பணம் கேட்க உனக்கு நேரம் இருக்காது. எந்த வேலையும் உன்னால் செய்ய இயலாது. எவ்வளவு உடல் வருத்தமும் மன வருத்தமும் உனக்கு ஏற்படும்.

இப்பொழுது சொல். நான் பணம் தர மாட்டேன் என்று சொன்னதற்காக நீ எனக்கு நன்றி பாராட்ட வேண்டுமா வேண்டாமா?” என்று கேட்டான்.

நண்பனின் சொற்களில் உண்மை இருப்பதை அறிந்த அவன் ஒன்றும் பேசவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறுகளை நாம் அனுமதிக்கும் போதே அவை நம்மை தடம் மாற்றி விடுகின்றன.

~ அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சீதையை தீயிடை இறக்கிய இராமபிரானின் நோக்கம்

இராமாயண காவியத்தில் வாலி வதையும் சீதையின் அக்னிப் பிரவேசமும் வாதப் பிரதி வாதங்களுக்குரிய இடங்கள்.

இத்தகு நிலை எதற்கு? என ஆராயும்போது தான் அவதாரமாயினும் இப்பூமியில் பிறந்து விட்டால், குற்றச்சாட்டுக்களும் பழிச்சுமை களும் தவிர்க்கவும் தடுக்கவும் முடியாதவை என்பது நிதர்சனமாகிறது.

ஆம், அவதாரபுருசராகிய இராமபிரானே கூனியின் கூன் முதுகில் மண் உருண்டையை எறிந்து விளையாடினார். அதன் விளைவாக பட்டாபிஷேகத்தை இழந்து, காடு செல்லும் அவலம் ஏற்படலாயிற்று.

அதேநேரம் சுக்ரீவனின் சந்திப்பும் அதன் நிமித்தம் நடந்த வாலி வதமும் வாலி வதத்தில் இராமபிரான் மறைந்திருந்து அம்பெய்து வாலியைக் கொல்ல, அது அறத்தின் மீறல் என வாதம் எழலாயிற்று. என்ன செய்வது இராமருக்கே அதுதான் விதி என்றாகிறது.

இவை நடந்து இராவண வதம் முடிவுற்று அசோகவனத்தில் சிறையினின்று சீதை மீட்கப்பட்ட பின்பு, சீதை தீயிடை இறங்கி தன் கற்பை நிரூபிக்க வேண்டும் என்கிறார் இராமர்.

அந்தோ! கொடுமை. சிறையிருந்த சீதை இராமபிரானை சதா நினைந்து வாழ்ந்தவள். இராமதூதன் அனுமனின் தோள்பற்றி செல்வதற்க்கூட மறுத்து; தன் நாயகன் தன்னை மீட்க வருவான். அவன் மீட்டுச் செல்வதே அவனுக்கான கௌரவம் எனக் கருதிய கற்புடைச் செல்வி.

இந்த உண்மைகளை இராமச்சந்திரமூர்த்தி அறியாதவரன்று. அப்படியானால், எதற்காக சீதையை தீயிடை இறக்கினார் என்றால், இங்குதான் சீதையின் கற்பின் திறத்தை இவ்வுலகம் அறிய வேண்டும் என இராமர் நினைக்கின்றார். அதனாலேயே சீதையை தீயிடை இறக்கி அவளின் கற்பை உலகறிய வைக்கிறார் இராமர்.

ஆம், அயோத்தி மாநகரின் பட்டத்து ராணியாக இருக்கப் போகும் சீதை களங்கமற்றவளாக இருக்க வேண்டும். இந்த உலகம் அவள் மீது சிறு பழிச்சொல்லைத்தானும் தந்து விடலாகாது.

இஃது அயோத்தி மாநகரத்து மக்களை குறித்துச் செய்ததுமன்று. மாறாக இராமாயண காவியம் இந்த உலகில் இருக்கும்வரை சீதையின் கற்பின் உன்னதம் உரைக்கப்பட வேண்டும். இந்த அடிப்படையிலேயே இராமபிரான் சீதையை தீயிடை இறக்கினார்.

இதை நாம் கூறும்போது, இப்போது இது எதற்கு என்று நீங்கள் கேட்கலாம். எல்லாம் காரணத்தோடுதான்.

இப்போது எங்கள் தமிழ் அரசியல் பங்கப் பட்டுவிட்டது. தமிழ் அரசியல்வாதிகள் தொடர்பில் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் கடுமையாகவும் கண்டபாட்டிலும் முன்வைக்கப்படுகின்றன.

இந்நிலையில் இவற்றைக் கடந்து தமிழ் அரசியல்வாதிகள் அரசியலில் நடத்துவதாயின் தத்தம் நேர்மையை நிரூபிக்க சீதைபோல் அக்னிப் பிரவேசம் செய்ய வேண்டும். அது நடக்குமா – நடைமுறைக்குப் பொருந்துமா?

ஆக, கடும் விமர்சனத்துக்கும் குற்றச்சாட்டுக்கும் ஆளாகியுள்ள தமிழ் அரசியல்வாதிகள் அரசியலில் துறவு பூண்டு, நேர்மையும் நீதியும் கொண்ட உத்தமர்களை தமிழ் அரசியல் களத்தில் இறக்க வேண்டும்.

அப்போதுதான் தமிழர்களுக்கான பட்டாபிஷேகம் சாத்தியமாகும்.

## ஓய்வூதிய உரிமைகளுக்காக நியமனக் கடிதத்தில் திருத்தம்

2016 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆம் திகதி க்குப் பின்னர் அரசசேவையில் இணைந்துகொண்ட உத்தியோகத்தர்களுக்கு ஓய்வூதிய உரிமைகளை வழங்குவதற்காக அவர்களது நியமனக் கடிதங்களைத் திருத்தியமைக்க அரச நிர்வாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கையை அந்த அமைச்சின் செயலாளர் எஸ். ஆலோக பண்டார அனைத்து அமைச்சின் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களுக்கு அனுப்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி 2016 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆம் திகதியன்றோ அல்லது அதற்குப் பின்னரோ அரச சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்ட அனைத்து அரச உத்தியோகத்தர்களின தும் நியமனக் கடிதங்களில் உள்ள ஓய்வூதியம் தொடர்பான சரத்தைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் திருத்தத்தின் படி அனைத்து அரச உத்தியோகத்தர்களுக்கும் ஓய்வூதிய உரிமை கிடைக்கும் என்பதுடன், இனிவரும் காலங்களில் அரச சேவையில் இணைத்துக் கொள்ளப்படும் உத்தியோகத்தர்களின் நியமனக் கடிதங்களிலும் ஓய்வூதியம் குறித்த சரத்து இவ்வாறு திருத்தப்பட வேண்டுமென அரச நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ந-7)

## அரநாயக்க பகுதியில் மண்சரிவு அபாயம்

நாட்டில் நிலவும் மழையுடனான வானிலையால் டித்வா புயலினால் ஏற்கெனவே மண்சரிவுக்குள்ளான அரநாயக்க பகுதியில் மீண்டும் மண்சரிவு அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதன்படி அரநாயக்கவின் அம்பலகந்த, தோதல்தோய மற்றும் கந்துன ஆகிய பகுதிகளுக்கு இந்த அபாய நிலை ஏற்பட்டுள்ளது.

அரநாயக்க நகரில் இருந்து தோதல்தோய வரை செல்லும் பிரதான காபற் வீதி அம்பலகந்த பகுதியில் நேற்று வெடித்துத் தாழிறங்கியுள்ளது.

கடந்த நாட்களில் மண்சரிவு ஏற்பட்ட இந்த இடத்தில் உள்ள பிரதான கால்வாயின் மதகு முறையாகப் புனரமைக்கப்படாத காரணத்தினால், பிரதான வீதியின் ஊடாக நீர் பாய்ந்து சென்றதாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகப் பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் தோதல்தோய கிராமத்திற்கு வாகனங்களில் பிரவேசிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன், மாற்று வீதியான புவக்வத்த வீதியும் மண்மேடுகள் சரிந்து விழுந்தமையால் தடைப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## மழையுடனான வானிலையால் மரக்கறிகளின் விலையில் வீழ்ச்சி

(நுவரெலியா)

நிலவும் மழையுடனான வானிலையைத் தொடர்ந்து மரக்கறிகளின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் வெளிமாவட்டங்களில் இருந்து வரும் மரக்கறிகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் நுவரெலியா பொருளாதார மத்திய நிலையத்தில் ஒரு கிலோகிராம் கோவா 120 ரூபாய்க்கும் ஒரு கிலோகிராம் கரட் 250 ரூபாய்க்கும்,

லீக்ஸ் ஒரு கிலோகிராம் 190 ரூபாய்க்கும் பீட்ரூட் ஒரு கிலோகிராம் 110 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது. (ந-7)

## மனம்பிட்டிய பகுதியில் மகாவலி பெருக்கெடுப்பு

நாட்டின் மேல் நீரேந்து பிடிப்புப் பகுதிகளில் பெய்து வரும் பலத்த மழை காரணமாக மனம்பிட்டியவில் மகாவலி ஆறு பெருக்கெடுத்துள்ளது. இதனால் லங்காபுர பிரதேச செயலகப் பிரிவிலுள்ள சோமாவதி வீதி மூடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்துரைத்த பொலநறுவை அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர், மகாவலி ஆற்றின் நீர்மட்டம் நிரம்பி வழியும் அளவை எட்டியுள்ளதாகவும் சுங்காவில - சோமாவதி வீதியின் சில பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளதாகவும் பொதுமக்களின் பாதுகாப்புக்காக வீதியை மூட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

நாட்டின் மேல் பகுதிகளில் பெய்து வரும் பலத்த மழையால் ஆற்றின் நீர் ஓட்டம் கணிசமாக அதிகரித்துள்ளமை ஆறு பெருக்கெடுக்கும் நிலைமைக்கு வழிவகுத்துள்ளது என்றார்.

இதேவேளை மகாவலி ஆற்றின் இருபுறமும் வசிக்கும் மக்கள் விழிப்புடன் இருக்குமாறும் நீர் மட்டம் தொடர்ந்து அதிகரித்தால் உத்தியோகபூர்வ அறிவுறுத்தல்களின்படி செயற்படத் தயாராக இருக்குமாறும் நீர்ப்பாசனத் திணைக்களம் கேட்டுள்ளது.

வெள்ளப் பெருக்குக் குறையும் வரை வாகன சாரதிகள் மாற்று வழிகளைப் பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (ந-7)

## துவிச்சக்கரவண்டி பட்டப்பகலில் திருட்டு

### பொலிஸார் விசாரணை

முள்ளியவளைப் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த துவிச்சக்கர வண்டியொன்று நேற்று முன்தினம் (21) பட்டப் பகலில் திருடப்பட்ட சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

குறித்த துவிச்சக்கர வண்டி தனியார் கல்வி நிலையத்திற்கு கல்வி பயில வந்த மாணவர்களால் வீதி ஓரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில், இளைஞன் ஒருவர் அதனைத்திருடிச் செல்லும் காணொளி அப்பகுதியில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி கமராவில் தெளிவாகப் பதிவாகியுள்ளது.

குறித்த சி.சி.ரி.வி காட்சிகளின் அடிப்படையில் பொலிஸார் விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளனர். (ந-7,299)

## சாவகச்சேரியில் மோட்டார் ஷெல்

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தனங்களப்பு வீதிப் பகுதியில் அமைந்துள்ள காணி ஒன்றில் இருந்து மோட்டார் ஷெல் ஒன்று நேற்று முன்தினம் சனிக்கிழமை அடையாளம் காணப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்திற்குத் தகவல் வழங்கப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் வெடிபொருளை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். (ந-7,30)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அடாவடிக் கோட்டை

## அமெரிக்க உளவுத்துறை சிஐஏ வரலாறு

**29**

**என்.சொக்கன்**

இந்த ஆதரவில் இரண்டு வகைகள் உண்டு. முதலாவது, “அண்ணன் சதாம் உசேன் செய்வதுதான் சரி, அவருக்குப் பின்னே அணிதிரள்வோம்” என்று பகிரங்கமாக அறிவித்துவிட்டு, ஈராக் படைகளுக்கு ஆதரவாகத் தங்களுடைய இராணுவத்தை அனுப்புவது.

இதுகூடக் கொஞ்சம் பரவாயில்லை. இரண்டாவது வகை “ஆதரவு” தான் மிகவும் ஆபத்தானது- ஈராக்குக்கு எதிராகப் படை திரட்டுகிறவர்களையெல்லாம், அவர்கள் எதிர்பாராத நேரத்தில் முதுகில் குத்திச் சேதம் உண்டாக்குவது.

சதாம் உசேன் விடயத்தில், இந்த இரண்டாம் வகை ஆதரவு தருவதற்கு நிறைய பேர் இருந்தார்கள். பல நாடுகளில் இருந்த தீவிரவாதக் குழுக்கள், அவருக்கு உதவும் வகையில் அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகள்மீது நேரடி, மறைமுகத் தாக்குதல்கள் நிகழ்த்தத் தீர்மானித்திருந்தன.

இவர்களையெல்லாம், சிஐஏவின் “தீவிரவாதத் தடுப்பு”ப் பிரிவு கவனித்துக்கொண்டது. தங்களது உளவுப் பிரிவின் உதவியுடன், நூறுக்கும் மேற்பட்ட தாக்குதல் முயற்சிகளை முன்கூட்டியே கண்டறிந்து, அந்தந்த நாடுகள், ஆட்சியாளர்களின் உதவியோடு தடுத்து நிறுத்தினார்கள்.

சிஐஏவின் உதவிமட்டும் இல்லாவிட்டால், அமெரிக்கா இப்படி ஓர் ஆபத்தை எதிர்பார்த்திருக்கவும் முடியாது. தவிர்த்திருக்கவும் முடியாது.

அதனால்தான், போரின் முடிவில் வெளியான அனைத்துத் தகவல் அறிக்கைகளும் சிஐஏவைப் புகழ்ந்திருந்தன. மிகச்சில தருணங்களைத் தவிர, வளைகுடாப்போர் தொடர்பாக சிஐஏ திரட்டித் தந்த எல்லாத் தகவல்களும் சரியாகவே இருந்தன.

அதையெல்லாம்விட முக்கியம், ஈராக் குவைத்தை ஆக்கிரமிக்கப் போகிறது என்று சிஐஏ முன்கூட்டியே அறிந்து சொல்லிவிட்டது. இதனால், அமெரிக்கா தனது அரசியல்ரீதியிலான நிலைபாடுகளைத் தெளிவாக்கிக்கொள்ள ஒரு நல்ல வாய்ப்புக் கிடைத்தது.

இதுதவிர, போரின்போது இராணுவத்துக்குத் தேவையான தகவல்கள், தீவிரவாத இயக்கங்களின் தாக்குதல் முயற்சிகளைப்பற்றிய விவரங்கள் போன்றவற்றைத் திரட்டித் தந்த சிஐஏ, வளைகுடாப் போரில் அமெரிக்காவின் வெற்றிக்கு மிக முக்கியமான பங்களிப்பைச் செய்திருக்கிறது.

இத்தனைக்கும், இப்படி ஒரு நேரடிப் போரின்போது உளவுப் பணியாற்றுவது சிஐஏவுக்குப் புதிய அனுபவம். என்றாலும், நிலைமையைப் பிரமாதமாகச் சமாளித்து நல்ல பெயர் வாங்கினார்கள்.

ஆனால், இதெல்லாம் கொஞ்ச காலத்துக்குத்தான். வளைகுடாப்போரின் ஞாபகங்கள் மறைந்தபிறகு, மக்கள் மீண்டும் “சிஐஏ எதற்கு?” என்று




கேள்வி கேட்கத் தொடங்கிவிட்டார்கள்.

“ஐயா மஹாஜனங்களே, சோவியத் யூனியன் போய்விட்டால், இனிமேல் நமக்கு எதிரிகளே இல்லை என்று அர்த்தமில்லை. நாங்கள் உலகம் முழுவதும் இருக்கிற தீவிரவாத இயக்கங்கள், அவற்றின் செயற்பாடுகளைப் பற்றித் தகவல் திரட்டிக் கொண்டிருக்கிறோம். இது போன்ற நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்துவது, தவிர்ப்பதன்மூலம், அமெரிக்காவுக்கு ஆபத்து எதுவும் வராதபடி பார்த்துக்கொள்கிறோம்” என்றது சிஐஏ.

ஆனால், மக்களுக்கு இதில் நம்பிக்கை வரவில்லை. ஏதோ சில ஒன்றரையணா லெட்டர் பேட் இயக்கங்களைக் கண்காணித்துக் கொண்டு சிஐஏ தனது நேரத்தையும், மக்களின் வரிப்பணத்தையும் வீணாக்குகிறது என்றுதான் பலரும் நினைத்தார்கள்.

நல்லவேளையாக, அதிபர் ஜார்ஜ் புஷ்ஷுக்கு, சிஐஏவின் அவசியமும் தெரிந்திருந்தது. தீவிரவாதத்தைத் தடுத்து நிறுத்துவதன் முக்கியத்துவமும் புரிந்திருந்தது. அதனைச் சரியானவிதத்தில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று விரும்பினார். இதனால், சிஐஏவுக்கு உடனடி ஆபத்து எதுவும் வந்துவிடவில்லை. எப்போதும்போல் உலகத்தைச் சுற்றிக் கண்களைப் பரவவிட்டுக் கொண்டு காத்திருந்தார்கள்.

என்ன பிரயோஜனம்? அவர்கள் தவிர்க்க நினைத்த அந்தத் “தீவிரவாதத் தாக்குதல்” கடைசியில் நிகழ்ந்து விட்டது -சிஐஏவின் மிகப் பெரிய தோல்வி அது!

### 12. பத்திரமில்லை

இரண்டாயிரமாவது ஆண்டு உலகமெங்கும் மில்லேனியக் கொண்டாட்டங்கள் ஜோராகத் தொடங்கியிருந்த நேரம். அப்போது, சிஐஏவிலிருந்து அமெரிக்க அதிபருக்கு ஒரு இரகசியக் கடிதம் வந்தது. வழக்கமான “ஹேப்பி நியூ இயர்” வாழ்த்து அல்ல. எச்சரிக்கை.

“பல தீவிரவாத இயக்கங்கள், அமெரிக்காவின் முக்கிய இலக்குகளைத் தாக்கத் திட்டமிட்டிருப்பதாக அறிகிறோம். அடுத்த சில மாதங்களுக்குள், அமெரிக்க மண்ணில் ஐந்து முதல் பதினைந்து பெரிய தாக்குதல்கள்வரை நிகழ வாய்ப்புகள் உண்டு. ஜாக்கிரதை!”

அவ்வளவுதான். தலையும் இல்லாமல் வாலும் இல்லாமல், ஏதோ சிஐஏவே அமெரிக்காவை மிரட்டுகிறது போல் இப்படி ஒரு குறிப்பு வந்தால், அதிபர் என்ன செய்யமுடியும்? சரி, ஜாக்கிரதையாக இருக்கிறோம் என்று சொல்லிவிட்டு அவர் தனது வேலையைப் பார்க்கப் போய்விட்டார். அதற்குமேல் சிஐஏவால் செய்யக் கூடியது எதுவும் இல்லை.

ஒன்று இரண்டு தாக்குதல்கள் இல்லை. ஐந்திலிருந்து பதினைந்து. ஏதோ தீபாவளிக்குப் பட்டாசு வெடிப்பது மாதிரி அமெரிக்கா முழுவதும் வரிசையாகத் தாக்குதல்கள் நடக்கப் போகின்றன என்று கணித்திருந்தது சிஐஏ. ஆனால், யார் இதையெல்லாம் செய்யப்போகிறார்கள் என்பதில்தான் குழப்பம்.

அன்றைய திகதிக்கு, உலகத் தீவிரவாத இயக்கங்கள் அனைத்தைப்பற்றிய புள்ளி விவரங்களை சிஐஏ விரல் நுனியில் வைத்திருந்தது. அவர்கள் அளவுக்கு இந்த இரகசிய இயக்கங்களைப்பற்றி தெரிந்து கொண்டிருந்தவர்கள் வேறு யாரும் இல்லை.

இதன் அடிப்படையில், அமெரிக்காவின் விரோதிகள் என்று சிலரை வட்டம் போட்டிருந்தார்கள். அவர்களைப் பற்றிய தகவல்கள் அரசுக்கு முறைப்படி தெரிவிக்கப்பட்டிருந்தன.

அதற்குமேல், இந்த அமைப்புகளைக் கட்டுப்படுத்துகிற, அல்லது ஒழித்துவிடுகிற முயற்சிகளில் சிஐஏ நேரடியாக ஈடுபடமுடியாது. வேண்டுமென்றால், அந்தந்த நாட்டு அரசாங்கம் / இராணுவம் / காவல்துறைக்கு வேண்டிய தகவல்களைக் கொடுத்து உதவலாம்.

சிஐஏ அதைதான் செய்தது. எந்த இயக்கத்தின்மீது லேசான சந்தேகம் எழுந்தாலும்கூட, உடனடியாக அவர்களைப்பற்றிய தகவல்கள் பரிமாறப்பட்டன. எதிர் நடவடிக்கைகளுக்குத் திட்டமிடப்பட்டது. இந்த விடயத்தில் கொஞ்சம் முன்னெச்சரிக்கையோடு இருந்தால் தப்பே இல்லை.

ஆனால் இத்தனைக்குப்பிறகும், அமெரிக்க மண்ணில், அவர்கள் மீதே தாக்குதல் நிகழ்த்தக்கூடிய இயக்கங்கள் எவை என்று அவர்களால் துல்லியமாகக் கண்டறியமுடியவில்லை. இவர்களாக இருக்கலாம். அவர்களாக இருக்கலாம் என்று குத்துமதிப்பாக ஊகம் செய்யமட்டுமே முடிந்தது.

மற்ற எல்லா நாடுகளையும்விட, அமெரிக்க ஆட்சியாளர்களுக்கு ஜாக்கிரதை உணர்ச்சி அதிகம். இந்த மனோபாவம், அவர்களுடைய காவல்துறையில் ஆரம்பித்து இராணுவம், உள் / வெளி விவகாரத்துறைகள், உளவுத்துறை என்று அத்தனையிலும் பிரதிபலிக்கும்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரட்டைப்...

செய்யப்பட்ட குறித்த சூத்திரதாரியை நேற்று (22) கடுவெல நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோதே குறித்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய, சந்தேகநபரை 90 நாட்கள் தடுத்து வைத்து விசாரணை செய்ய அனுமதி கிடைத்துள்ளதாக ஹோமாகம பிராந்திய குற்றப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை அக்குரேகொட இரட்டைக் கொலை தொடர்பில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட குறித்த துப்பாக்கிதாரி தொடர்பில் மேலும் பல தகவல்களைப் பொலிஸார் வெளியிட்டுள்ளனர்.

அதன்படி, குறித்த துப்பாக்கிதாரி ஒரு முன்னாள் இராணுவச் சிப்பாய் எனவும் 2009ஆம் ஆண்டு வழங்கப்பட்ட பொது மன்னிப்புக் காலத்தில் அவர் சட்டபூர்வமாக இராணுவத்திலிருந்து விலகியவர் எனவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ந-7)

## பொதுஜன...

25ஆம் திகதி ஆரம்பிக்கப்படுமென இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்பிரகாரம் மார்ச் மாதம் 18 ஆம் திகதி வரை வாய்மொழி மூலமாகவும் எழுத்து மூலமாகவும் பொது மக்களின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என அந்த ஆணைக் குழு குறிப்பிட்டுள்ளது.

நாட்டின் 9 மாகாணங்களையும் உள்ளடக்கும் வகையில் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதுடன், அதன் பின்னர் ஏனைய விடயங்களையும் கருத்திற்கொண்டு மின்சாரக் கட்டணத் திருத்தம் குறித்த தீர்மானத்தை ஆணைக்குழு மேற்கொள்ளவுள்ளது.

2026ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டிற்காக, அதாவது ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் ஜூன் மாதம் 31ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு 13.56 சதவீத மின்சாரக் கட்டண அதிகரிப்பை எதிர்பார்த்து, கடந்த 13ஆம் திகதி இலங்கை மின்சார சபையினால் பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவிடம் இந்த யோசனை சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(ந-7)

## எரிவாயுக்...

எரிவாயுத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் முகமாக நேற்றைய தினம் (22) 3700 மெட்ரிக் தொன் எரிவாயுவை ஏற்றிய கப்பல் நாட்டை வந்தடைந்துள்ளது.

இந்தநிலையில், இதைப் பயன்படுத்தி 3 இலட்சம் வீட்டு சமையல் எரிவாயு சிலிண்டர்கள் சந்தைக்கு விநியோகிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், 3900 மற்றும் 3700 மெட்ரிக் தொன் எரிவாயுவை ஏற்றிய மேலும் இரு கப்பல்கள் முறையே எதிர்வரும் 24 மற்றும் 28ஆம் திகதிகளில் நாட்டை வந்தடையவுள்ளன.

எவ்வாறாயினும், நேற்றைய தினமும் (22) நாட்டின் பல பகுதிகளில் எரிவாயுத் தட்டுப்பாடு நிலவியமையை அவதானிக்க முடிந்தது. (ந-7)

## முச்சக்கர

சென்று சாரதியைக் கொலை செய்து, முச்சக்கரவண்டியைக் கொள்ளையிட்ட சம்பவம் தொடர்பில் புத்தளம் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இவ்வாறு படுகொலை செய்யப்பட்டவர் புத்தளம் - தில்லையடி, அல்-காசிம் கிராமத்தைச் சேர்ந்த 72 வயதுடைய ஐந்து பிள்ளைகளின் தந்தை என அடையாளம் காணப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நேற்று முன்தினம் (21) இரவு உயிரிழந்தவரின் வீட்டிற்கு வந்த நபர் ஒருவர், சவாரி ஒன்றிற்குச் செல்வதாகக் கூறி அவரை அழைத்துச் சென்றுள்ளார்.

இந்நிலையில் நேற்று (22) அதிகாலை புத்தளம் - அடப்பன வில்லு பகுதியில் உள்ள வாய்க்கால் ஒன்றில் சடலம் ஒன்றைக் கண்ட பிரதேசவாசி ஒருவர், அது குறித்து பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர், வாடகைக்குச் சென்ற முச்சக்கர வண்டியின் உரிமையாளர் என அவரது உறவினர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளது. (ந-7)

## விஸ்தரிப்பு...

பலாலி சர்வதேச விமான நிலையத்தை விஸ்தரிப்புச் செய்வது தொடர்பில் இந்தியாவும் இலங்கையும் உடன்பட்டிருந்த நிலையில், விஸ்தரிப்புக்குத் தேவையான உதவிகளையும் இந்தியா வழங்கியிருந்தது.

எனினும் பலாலி சர்வதேச விமான நிலையத்தில் விஸ்தரிப்புப் பணிகள் எதுவும் இடம்பெறாமையால் இந்திய மத்திய அரசு கடும் அதிருப்தியடைந்திருந்தது.

இந்நிலையில் இந்தியாவுக்குச் சென்றிருந்த ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவிடம் தனது அதிருப்தியை இந்திய மத்திய அரசு நேரில் தெரிவித்திருந்தது.

இதனையடுத்து அவசர அவசரமாக யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த போக்குவரத்து அமைச்சர் அநுர கருணாதிலக்க, பலாலி சர்வதேச விமான நிலையத்துக்குச் சென்றதுடன் பலாலி சர்வதேச விமான நிலையம் உடனடியாக அபிவிருத்தி செய்யப்படும் எனத் தெரிவித்திருந்தார்.

பலாலி சர்வதேச விமான நிலையம் தொடர்பில் இந்திய மத்திய அரசு தீவிர கருசனை காட்டி வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-7)

## ரயி

இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர்.

நேற்று (22) காலை 7.30 மணியளவில் இந்த விபத்துச் சம்பவித்துள்ளது.

விபத்தின்போது கப்ரக வாகனம் சுமார் 50 மீற்றர் தூரம் இழுத்துச் செல்லப்பட்டுள்ளது.

விபத்தில் பலத்த காயமடைந்த வாகனச் சாரதி உள்ளிட்ட மூவர் களுத்துறை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் அவர்களுள் 22 மற்றும் 28 வயதுடைய இரண்டு இளைஞர்கள் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த ரயில் கடவையில் வர்ண சமிக்ஞை முறைமை சரியாக இயங்கவில்லை எனவும், முறையான பாதுகாப்புக் கடவை பொருத்தப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ந-7)

## நாட்டை விட்டு...

காரணமாக தற்போது நிலவும் பலத்த மழை நிலைமை படிப்படியாகக் குறைவடையக்கூடும் எனவும் இன்று வடக்கு, வட மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் திருகோணமலை மாவட்டத்திலும் மழை பெய்வதற்கான சாத்தியம் காணப்படுவதாகவும் வளி மண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது. (ந-7)


மஹஜன சம்பத — திகதி 2026.02.22 — சீட்டிழுப்பு இலக்கம் 6113 — F 0 1 3 7 9 6
அத சம்பத — F 3 7 9 6 — சீட்டிழுப்பு இலக்கம் 0688

சுப தவசக் — திகதி 2026.02.22 — சீட்டிழுப்பு இலக்கம் 0229 — கும்பம் 20 49 53 — 0620

தன நிதானய — திகதி - 2026.02.22 — சீட்டிழுப்பு இலக்கம் - 2143 — I 01 05 06 81 I

மெகா பவர் — திகதி 22/02/2026 — சீட்டிழுப்பு இலக்கம் 2461 — A 01 07 40 52 55

ஜய — திகதி 2026.02.22 — சீட்டிழுப்பு இலக்கம் 0381 — G 6 5 3 5

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4355 — சீட்டிழுப்பு திகதி 22.02.2026 — X 11 32 54 67 — X

ஹந்தஹன — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2026.02.22 — சீட்டிழுப்பு இலக்கம் 1422 — தனுசு 14 22 31 47 தனுசு

உத்தியோகபூர்வ முடிவுகள் — துபாய் தன சம்பத — 22.02.2026 — வெற்றி வாரம் 0821 — J 6 4 0 4 3 4 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.21,967,665.20

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 3087 — சீட்டிழுப்பு திகதி 2026.02.22 — தினம் ஞாயிற்றுக்கிழமை — 03 05 42 76 V — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.100,739,980.80

சனிதா — 22.02.2026 — வெற்றி வாரம் 5248 — 03 04 10 73 Z — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 52,918,258.80

சசிரி — 917 — சீட்டிழுப்பு திகதி 22.02.2026 — ஞாயிற்றுக்கிழமை — 20 22 38 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.3,174,120.00

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4799 — சீட்டிழுப்பு திகதி 22.02.2026 — தினம் ஞாயிற்றுக்கிழமை — 22 29 32 56 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,291,106.00

கப்ருக — W 26 01 36 38 40 — 2263 — 22.02.2026 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.1,56,366,810.00

அத கோடிபதி — ஞாயிற்றுக்கிழமை — வெற்றி வாரம் 2913 — சீட்டிழுப்பு திகதி 2026.02.22 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.92,744,012.80 — 05 24 39 56 S


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயங்கரவாதத் தடைச் சட்டங்களை எதிர்த்து திருக்கோவிலில் கையெழுத்துப் போராட்டம்

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கக் கோரியும் புதிதாகக் கொண்டுவரப்பட இருக்கின்ற பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாத்தல் எனும் புதிய சட்டத்தை எதிர்த்தும் வடக்கு கிழக்கு தமிழர் தாயகம் எங்கும் கையெழுத்து சேகரிக்கின்ற பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் நேற்றைய தினம் (22) அம்பாறை மாவட்டம் திருக்கோவில் தம்பிலுவில் மத்திய சந்தைக்கு முன்பாகவும் கையெழுத்து சேகரிக்கும் பணி முன்னெடுக்கப்பட்டது.

மதகுருமார்கள், பல்கலைக்கழக மாணவர்கள் உள்ளிட்டோரும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளும் சமூக செயற்பாட்டாளர்கள், பொது அமைப்புப் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு இந்தப் பணியினை முன்னெடுத்திருந்தார்கள். (ந-7)

## பொலிஸார் நடத்திய சூடு நீதி வேண்டிப் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டிப் பகுதியில் வைத்து பொலிஸாரால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட அயூப் ராஜ் அருள்பாயஸூக்கு நீதி வேண்டி நேற்றைய தினம் யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்திற்கு முன்பாகக் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மனித உரிமைகள் ஆர்வலர்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் தவத்திரு வேலன் சுவாமிகள், குரல் அற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் முருகையா கோமகன், யாழ். மாநகரசபை உறுப்பினர்கள், கொலை செய்யப்பட்டவரின் உறவினர்கள், காணாமல் ஆக்கப்பட்டோரது சங்கத்தின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பதாகைகளை ஏந்தியவாறு, நீதி வேண்டும், பொலிஸாரிடமிருந்து மக்களுக்குப் பாதுகாப்பு வேண்டும் எனக் கோஷமிட்டவாறு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். (ந-7,33,104)


## மாப்பிள்ளை தேவை

01.அனலைதீவு, இந்து, 2000, கேட்டை, O/L, Cananda Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (54407)

02.சண்டிலிப்பாய், இந்து, 1987, உத்திரட்டாதி, Business Managment, UK Citizen, Divorce பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.(57038)

03.மீசாலை, இந்து, 1993, சதயம், MBBS Doctor பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.(56429)

04.குப்பிளான், இந்து, 1997, கேட்டை, Lawyer, Germany Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.(55147)

05.சுதுமலை, இந்து, 1991, விசாகம், Bsc BSCN, Canada Citizzen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.(55115)

06.மாதகல், இந்து, 1990, திருவோணம், BBA, Germany & Canada Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (54542)

07.கந்தர்மடம், இந்து, 1988, ரோகிணி, Bsc Biomedical, ACCA, UK Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (54136)

08.காரைநகர், இந்து, 1992, சித்திரை, Phd, Canada Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.(54115)

09.காரைநகர், இந்து, 1990, ஆயிலியம், AAT, UK Citizen, Divorce பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.(55026)

10.மாவிட்டபுரம், இந்து, 1985, ரேவதி, A/L, Manager, Uk Citizen, Divorce பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (54067)

நீங்களாகவே எமது www.thaalee.com என்கின்ற website இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம். Unmarried, Divorce என்பன உண்டு.

(6881)

S.Sharma J.P | 077 539 3728
www.thaalee.com | 077 992 1494


## சுயாதீன வழக்குத்...

கப்படும் நடவடிக்கைகள் பற்றி விபரிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குறித்த விடயம் சம்பந்தமாக அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் குற்றவியல் வழக்குகளைக் கையாள்வதற்காக சுயாதீன வழக்குத்தொடுநர் எனும் புதிய கட்டமைப்பை உருவாக்குவதற்கான ஆரம்ப வரைவுப் பணிகள் எதிர்வரும் ஏப்ரல் மாதத்திற்குள் நிறைவு செய்யப்படும்.

இந்தப் புதிய கட்டமைப்பானது தற்போதுள்ள சட்டமா அதிபர் திணைக்களத்தைக் கலைப்பதற்கான முயற்சி அல்ல என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

சட்டமா அதிபர் தனது தற்போதைய பணிகளைத் தொடர்வார். அதில் எவ்விதமான பிரச்சினைகளும் இருக்காது. எனினும் குற்றவியல் வழக்குகளைத் தாக்கல் செய்வதற்கு ஒரு சுயாதீனமான நிறுவனம் உருவாக்கப்படும்.

அந்த சுயாதீன வழக்குத்தொடுநர் அரசாங்கத்தின் கொள்கைகளால் அன்றி, சாட்சியங்கள் மற்றும் சட்ட ரீதியான காரணிகளால் மட்டுமே வழி நடத்தப்படுவார்.

உயர் நீதிமன்ற நீதியரசர் யசந்த கோதாகொட தலைமையிலான குழு, சட்டத்தரணிகள் சங்கம் மற்றும் நீதிச் சேவை ஆணைக்குழு ஆகியவற்றுடன் இணைந்து குறித்த கட்டமைப்புக்கான அதிகாரங்கள் தொடர்பிலான ஆய்வுகளும் ஆலோசனைகளும் நடத்தப்படுகின்றன. அக்கட்டமைப்புக்கான சட்டமூலம் தயாரானதும் அது பொதுமக்களின் கருத்துக்களுக்காக முன்வைக்கப்படும் என்றார். (ந-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-5041) 076 825 7716 (ஆகாஸ்)

## வாடகைக்கு

யாழ்.நகரின் மத்தியில் பிரதான வீதி முகப்புடன் 10 பரப்பில் அமைந்த சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 077 723 2535 (6904)

## இலங்கையில் இருந்து கனடாவிற்கு

கப்பல் மூலம் பொதிகளை அனுப்ப



10-19 Kg - 1000/Kg
20-49 Kg - 900/Kg
50Kg இற்கு மேல் - 800/Kg

DELIVERY ▶ 2-3 Months

எமது நேரடி கிளைகள்: திருகோணமலை, புதுக்குடியிருப்பு, கோப்பாய், யாழ்ப்பாணம், பருத்தித்துறை, வவுனியா, முல்லைத்தீவு, சுன்னாகம், சங்கானை, வல்வெட்டித்துறை, கொழும்பு, மன்னார், கொடிகாமம், மானிப்பாய், புத்தூர், மட்டக்களப்பு, கிளிநொச்சி, சாவகச்சேரி, பண்டத்தரிப்பு, நெல்லியடி (C-5040)

V2 TRAVELS 076 822 6244 076 455 0672

## 22 விற்பனைக்கு 22

- யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் நவீன சந்தைக்கு முன்பாக 32 அடி அகலமும் 216 அடி நீளமும் கொண்ட இரண்டு கடைகள்
- யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் மரக்கறி மாக்கற்றுக்கு முன்பாக 16 அடி அகலமும் 216 அடி நீளமும் கொண்ட மூன்று மாடிக் கடையும்
- யாழ்.ஸ்ரான்லி வீதியில் 32 அடி அகலமும் 100 அடி நீளமும் கொண்ட இரண்டு மாடிக் கடையும்
- யாழ்.வைமன் வீதியில் பாரதி சிலைக்கு அண்மையில் 5 பரப்பில் அமைந்த வீடும்
- யாழ்.குரோஸ் வீதி நாவலர் வீதி முகப்புடன் 10 பரப்புக் காணியும்
- யாழ். நல்லூர் கோயிலுக்கு அண்மையில் 22 பரப்புக் காணியும்
- யாழ்.அல்லைப்பிட்டி சந்திக்கு அண்மையில் ஊர்காவற்றுறை பிரதான வீதியில் 100 பரப்புக் காணியும்
- யாழ்.மின்சார நிலைய வீதியில் பழைய தபாற்கந்தோர் ஒழுங்கையில் 6 பரப்புக் காணியும் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: (6904)
077 723 2535

## காணி குத்தகைக்கு தேவை

கொக்குவில், கோண்டாவில், உரும்பிராய், மருதனார்மடம், இணுவில் போன்ற பிரதேசங்களில் பிரதான வீதிக்கு அண்மித்ததாக உள்ள காணி குத்தகைக்குத் தேவை.

தொடர்புகளுக்கு: (6905)
077 291 9079

## பணியாளர் தேவை

சண்டிலிப்பாய் பிரதேச சபை எல்லைக்குள் தங்கி நின்று விருந்தினர் விடுதி பராமரிக்க பணியாளர் தேவை.

- நற்பழக்கம் மற்றும் தேக ஆரோக்கியம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.
- சம்பளம் திறமைக்கு ஏற்ப நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு: (2081)
077 800 2591


## கண்ணீர் அஞ்சலி

எமது நிலையத்தின் உறுப்பினர் திரு.பொ.சந்திரநாதன் அவர்களின் அன்பு மனைவியும் எமது நிலைய விளையாட்டுக் கழக வீரர் திரு.ச.மதுசன் அவர்களின் அன்புத் தாயாருமான

**திருமதி ரதி சந்திரநாதன்**

(ஓய்வு நிலை உப அதிபர் கொக்குவில் இந்துக் கல்லூரி)



அவர்களின் மரணச் செய்தி அறிந்து துயரடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**கொக்குவில் மத்திய சன சமூக நிலையமும் விளையாட்டுக் கழகமும்.** (K.c.c.c & K.c.c.c.s.c) (C-5035)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.02.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.